# அச்சாரம்

# ACCHARAM

பல்சுவை மாத இதழ்

Tamil Monthly

மலர் 5 இதழ் 1 ஆகஸ்ட் 2020 விலை ரூ.15/

Volume 5 Issue 1 August 2020 Price Rs.15/-








ஆசிரியர்
பக்கம்

# அச்சாரம்


மலர் 05 இதழ் 1 ஆகஸ்ட் 2020



வெளியிட்டாளர் ஆசிரியர்
எம்.சி.சேகர்B.E,



இணை ஆசிரியர்கள்
N.பழனிவேல், பா.ரஞ்சித்குமார்,
R.சுருளிவேல் V.அன்பரசன், பாலகுமார்சோமு,
R.துரைB.E R.சிவா, தமிழ்ஆப்தன்

துணை ஆசிரியர்கள்
T.மதுராஜ், S.ரவிகுமார்,
R.சரண்குமார்B.E, K.ராஜ்சிற்பி,A.E.செல்வராஜ்

பொறுப்பாசிரியர்
M.திரவியப்பாண்டியன்M.A.,L.L.B.,

சிறப்பாசிரியர்கள்
s.p.ஜாகுவார் தங்கம்
T.அன்பழகன்

நிருபர்கள்
சே.உமா, மதன சாலமோன் , சரண்
S. சையத் அமீன் நிவாஸ், ரமேஷ், B.P
முன்னா, V.சிவக்குமார். S.அருண்குமார்,

புகைப்படக் கலைஞர்
K.சுரேஷ் B.T.ech.,

சட்ட ஆலோசகர்கள்
K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,
சி.காசிவிஸ்வநாதன் B.Sc.,B.L.,
P.பாலசுப்ரமணியம் B.A.,B.L.,

அன்பு வடிவமைப்பு 90920 88889



SF1,2nd Floor,5/10,Anna Colony,
Virugambakkam,Chennai-600 092
Cell - 94441 53340
E.Mail - accharam2016@gmail.com




அனைத்து வாசகர்களுக்கும்,விற்பனையாளர்களுக்கும்
விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும்

முதல் வணக்கம்

உங்கள் ஆதரவோடு ஆகஸ்ட் 1 ல் வெளிவரும் அச்சாரம்
ஐந்தாம் ஆண்டின் 1 ஆம் இதழை
வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள்
சந்தா தொகையை செக்காக அனுப்புவது மட்டுமல்லாமல்
வங்கியிலும் செலுத்தி நமது அச்சாரம் பத்திரிக்கைக்கு ஆதரவு
கொடுத்துக்கொண்டு வருவதற்கு

நன்றி



என்றென்றும் உங்கள்
எம்.சி.சேகர்,B.E., ஆசிரியர்
94441 53340

# இராசுக்குட்டி பதில்கள்

தம்பதிகள் பிரிவதற்கு என்ன காரணம்?

சுமன், மதுரை

சமீபத்தில் படித்தது

தம்பதியர்கள் பிரிவதற்கு, பெண்களின் கழுத்தில் இருக்கும் திருமாங்கல்யமும் ஒரு காரணம்! மாங்கல்யத்தில் மறைந்துள்ள ரகசியத்தை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

என்ன இது? திருமாங்கல்யம் கழுத்தில் இருந்தால்தானே, தம்பதியர் என்பதற்கு அர்த்தம். ஒரு கணவன், மனைவியுடைய பிரிவதற்கு திருமாங்கல்யம் எப்படி காரணமாக இருக்கும்! என்ற சந்தேகம் கட்டாயம், இந்த தலைப்பை படித்த ஒவ்வொருவருமே எழும். இன்றைய சூழ்நிலையில் திருமண பந்தத்தில் இணையும் கணவன், மனைவிக்கிடையே பிரச்சனைகள் அதிகரித்து, வாக்குவாதம் அதிகரித்து, விவாகரத்தும், பிரிவும், நிம்மதியற்ற சூழ்நிலையும் அதிகரிக்க முக்கியமான காரணம் என்ன? என்பதை பற்றிதான் ஜோதிடரீதியாக, இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ளப் போகின்றோம்.

நம்முடைய சாத்திரப்படி திருமாங்கல்யத்தை எதற்காக மஞ்சள் கயிரில் அணிகிறார்கள், என்பதற்கான காரணத்தை முதலில் தெரிந்து கொள்வோம். ஜோதிடப்படி கயிறு என்பது கேதுவின் அம்சமாக சொல்லப்பட்டுள்ளது. அந்த கயிரை வைத்தான் திருமாங்கல்யம் கட்டுகின்றோம். இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், கேது தரக்கூடிய பிரச்சனைகளை சரி செய்பவர் 'குரு'. குருவின் அம்சமாக சொல்லப்படுவது மஞ்சள்.

ஆகவே, மஞ்சள் கயிறால் தாலியை அணிந்து கொண்டிருக்கும் பெண்களின் வாழ்க்கையும், அந்தப் பெண்ணை மணமுடித்த கணவரின் வாழ்க்கையும், சிறப்பாக இருக்கும் என்று சொல்கிறது சாஸ்திரம். இன்றைய



நாகரீகச் சூழலில், மஞ்சள் கயிறை மாற்றி, தங்கத்தால் சரடு அணியும் வழக்கத்திற்கு நாம் வந்துவிட்டோம். காலத்திற்கு ஏற்ப தம்பதியினருக்கு இடையே பிரச்சனைகள் அதிகரித்து கொண்டே தான் வருகிறது. கண்கூடாக இது நாம் காணும் உண்மை தானே!

நம்முடைய திருமண வாழ்க்கையில் கேதுவால், ஏற்படக்கூடிய சிக்கல்களை தீர்க்க வேண்டும் என்றால் அது குருவினால் மட்டுமே முடியும். இந்த இடத்தில் சில பேருக்கு கட்டாயம் சந்தேகம் எழும்? தங்கத்தால் தாலி சரடு அணிந்து இருபவர்-கள் எல்லாருக்குமே இந்த பிரச்சினை வந்து விடுகிறதா? தங்கத்தால், சரடு போட்டிருக்கும் பெண்களும் கணவரோடு ஒற்றுமையாக தான் உள்ளார்களே, என்ற கேள்வி கட்டாயம் நம்மில் பல பேருக்கு தோன்றும். அது இயற்கை தான்.



நன்றாக ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவருடைய ஜாதக கட்டமும், நேரமும், காலமும், சரியாக இருக்கும் பட்சத்தில், எந்த தோஷமும் எந்த பிரச்சனையும், நமக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. ஒருவருக்கு ஜாதக கட்டத்தில் பிரச்சினை எப்போது ஆரம்பிக்கிறதோ, கஷ்ட காலம் எப்போது தொடங்குகின்றது! அப்போது தான், அவர்களுக்கு சாஸ்திரத்தை மீறியதால் பிரச்சனை உண்டாகும். அந்த சமயத்தில் அவர்கள் எதிர்கொள்ளவேண்டிய பாதிப்புகள், அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகளும் அதிகமாக தான் இருக்கும்.

'அதற்காக, மஞ்சள் கயிறில், தாலி சரடை போட்டுக் கொண்டால், கணவன் மனைவிக்கிடையே பிரச்சினையே வராது' என்பதும் அர்த்தமல்ல. பிரச்சனைகள் வந்தாலும், அதை அனுசரித்து செல்லக் கூடிய பக்குவம் அவர்களிடத்தில் ஏற்படும், என்பதை வலியுறுத்துகிறது சாஸ்திரம்.

முடிந்தவரை, சரடை தங்கத்தில் போட்டிருந்தாலும், உங்களது மாங்கல்ய குண்டுகளை மஞ்சள் கயிரால் கோர்த்து கட்டிக்கொள்வது இல்லற வாழ்க்கைக்கு மிகவும் நல்லது. இதேபோல் திருமண நாள், ஆடிப்பெருக்கு, சுமங்கலி விரதம், போன்ற மங்களகரமான நாட்களில் கணவன், மனைவியின் திருமாங்கலத்திலும், நெற்றியிலும், நெற்றி வகுட்டிலும் குங்கும பொட்டு வைப்பது என்பது மிகவும் விசேஷமானது.

ஒருவருடைய ஜாதக கட்டத்தில் ஏதாவது மாங்கல்ய தோஷம் இருந்தாலும், கூட கணவன் திரும்பத்திரும்ப, மனைவியின் நெற்றியிலும், வகிட்டிலும், மாங்கல்யத்திலும் குங்குமம் வைப்பதுனாலும், வரலட்சுமி விரதத்தன்றும், ஆடிப்பெருக்கன்றும் மஞ்சள் கயிறை கணவன்மார்கள், மனைவியின் கழுத்தில் கட்டுவதினாலும், எப்பேர்பட்ட தோஷமும் நிவர்த்தி ஆகி விடும் என்றும் நம்முடைய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, தான் இப்படிப்பட்ட பூஜையின்போது மங்களகரமான குரு பகவானின் அம்சம் பொருந்திய மஞ்சள்கயிறுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சாஸ்திரங்களையும், சம்பிரதாயங்களையும் நம் முன்னோர்கள் வெறுமனே சொல்லிவிடவில்லை. எல்லாவித சாஸ்திர சம்பிரதாயங்களின் பின்னணியில் ஒரு அர்த்தம் உண்டு, என்றைக்கு நம் வாழ்வில் சாஸ்திர சம்பிரதாயங்களை மறந்து, இந்த உலகம் நாகரீகத்திற்கு மாறிக்கொண்டு வரும் சூழ்நிலை ஏற்பட்டதோ, அன்றே நம் வாழ்க்கையில் பிரச்சனையும் ஆரம்பித்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். நம் முன்னோர்கள் சொன்ன கூற்றை நம் மனதில் வைத்துக்கொண்டு, நம்முடைய திருமாங்கல்யத்தில், கட்டாயம் மஞ்சள் பூசப்பட்ட கயிறு இணைத்து, நம்முடைய திருமண வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொள்வது, நம் கையில்தான் உள்ளது. திருமணமான தம்பதியர்கள் பிரிவதற்கு, பெண்களின் திருமாங்கல்யத்தில், மஞ்சள்கயிறு இல்லாததும், ஒரு காரணம்

நிம்மதியாக வாழ வழி?

குணா, விழுப்புரம்

நம்பிக்"கை" வை

ஓர் அரசன் மிகவும் முன் கோபக்காரன்.. தன் கெட்ட குணம் தெரிந்தும் அவனால் அதை மாற்றிக் கொள்ள முடிய வில்லை..

ஒரு நாள் அறிஞர் ஒருவர் அந்த நாட்டுக்கு வந்து இருந்தார்.. அவரை சந்தித்து தன் குறையை சொன்னான் அந்த மன்னன்.. அவர் மன்னனிடம்..

*என்னிடம் அதிசயமான பொன்னால் செய்த ஒரு குவலை ஒன்று இருக்கிறது.. அதில் தண்ணீரை நிரப்பி குடித்து வந்தால் நாளடைவில் உன் சினம் இல்லாமல் போய்விடும;* என்று சொல்லி அந்த குவளையை அவனிடம் கொடுத்தார்..

உனக்குச் சினம் எப்போது எல்லாம் வருகிறதோ, அப்போது இதில் மூன்று முறை தண்ணீர் நிரப்பிக் குடி.. பிறகு சினமே வராது..ூ என்று கூறிவிட்டு சென்றார்..

அன்றில் இருந்து அரசன் அப்படிச் செய்யத் தொடங்கினான்.. சில நாட்களில் அவன் சினம் அவனை விட்டு விலகியது..

பல வருடங்கள் சென்றன.. அந்த குவளையை கொடுத்த அந்த அறிஞர் மீண்டும் அந்த நாட்டுக்கு வந்தார்..

அரசன் அந்த அறிஞரை சந்தித்து குவலை கொடுத்ததற்காக பலமுறை நன்றி கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான் மன்னன்..

*மன்னனே.. உன்னை ஏமாற்ற நான் விரும்ப வில்லை.. அது அதிசயமான குவளை அல்ல.. சாதாரணமான குவளைதான்..*

*சினம;* ூவரும்போது சிந்திக்க நேரம் இருக்காது.. சிந்தனை வந்தால் சினம்தானே குறையும்..

தண்ணீரை மூன்று முறை ஊற்றிக் குடிக்கும் போது நேரம் கிடைக்கிறது.. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன..

ஆத்திரம் நியாயத்திற்குத் தன் இடத்தைக் கொடுக்கிறது.. என்று கூறினார்..

ூமற்றவர்கள் நம்மிடத்தில் கோபப்பட்டாலும், அதை சகித்துக் கொண்டு பேசாமல் அமைதியாக உட்கார வேண்டும். இதனால் நமக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது..ூ

ூநாம் கோபப்படும் போது மற்றவர்கள் நம்மீது கோபப்படும் போதும், நாம் அமைதியாகவும், பக்குவமாகவும் இருப்பது நல்லது..ூ

ூஎல்லா நேரங்களிலும் நாம் நிதானத்தோடு இருந்தால் நிம்மதியாக வாழலாம்..ூ




எனது அருமை சகோதரர் உதயா அவர்கள் ஒரே நாளில் எடுத்த சார்ட் பிலிம் செக்யூருட்டி. திரையுலக பிரம்மாக்கள் போற்றும் அழகிய காவியம் பிரமாண்ட வைரலாகி கொண்டிருக்கிறது . நிச்சயமாக விருதுகள் பல குவிக்கும்.நாட்டை காப்பாற்றும் இராணுவ வீரரின் கதை மிகவும் நேர்த்தியாக எடுத்திருக்கிறார். அழகான குறும்படம்.உலக தரம்வாய்ந்த சிறந்த குறும் படம்.உதயா அவர்களின் புதல்வன் சுட்டி குழந்தையின் நடிப்பும் அற்புதம். பிறமாண்ட கலை வாரிசாக உதயமாகின்றார். வாழ்துக்கள் .



## சொன்னதைச் செய்த சூர்யா

தமிழ் சினிமா உலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் சூர்யா. இவரது தம்பி கார்த்திக்கும் தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக உள்ளார். இவர்களது அப்பா சிவகுமார் ஒரு நடிகர். இவர்களது குடும்பமே கலைக் குடும்பம். இவர் சினிமா உலகின் நடிப்பைத் தாண்டி பல உதவிகளையும் சமூகத்திற்கு செய்து வருகிறார்.

விவசாயிகளுக்கு உதவுவது, கல்வி கற்க முடியாத நிலையில் வாழ்க்கையில் கஷ்டப்படும் மாணவர்களுக்கு உதவுவது போன்ற பல நற்பணிகளை செய்து கொண்டு வருகிறார்.

2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தான் அகரம் அறக்கட்டளை. தரமான கல்வியை சமுதாயத்தின் அனைத்து தரப்பினருக்கும் கொண்டு சேர்ப்பது தான் இந்த அறக்கட்டளையின் நோக்கம். சமூக தீமைகளை நீக்குவதற்கும், அனைவருக்கும் கல்வி வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பின் நிறுவனர் நடிகர் சூர்யா சிவகுமார் ஆவார்.

இதற்கு சினிமா பிரபலங்கள் சார்பாகவும், அரசியல் சார்பாகவும் பலர் இந்த அகரம் அறக்கட்டளைக்கு ஆதரவு கொடுத்து வந்து உள்ளார்கள்.இப்படி ஒரு நிலையில் நடிகர் சூர்யாவின் உதவியால் தற்போது கூலித் தொழிலாளியின் மகன் ஒருவர் மருத்துவராக மாறி இருக்கிறார். 10 வருடம் முன் நிகழ்ந்த சம்பவம் ஆகும் இது. தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடிகர் சூர்யா சார்பாக அகரம் மூலம் நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஆகும்.

இதே நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த நந்த குமார் என்பவர் கலந்து கொண்டு இருந்தார். அந்த நிகழ்ச்சியில் சூர்யாவிடம் உதவி கேட்டு இருந்த நந்தகுமார் நான் தற்போது இரண்டாம்



வகுப்பு படித்திருக்கிறேன் என்னுடைய மதிப்பெண் 1160 எனக்கு மருத்துவம் படிக்க வேண்டும் என்று ஆசை ஆனால் எனக்கு வசதி இல்லை என்று கூறி இருந்தார். பின்னர் நந்தகுமாரின் பெற்றோரிடமும் அந்த நிகழ்ச்சியில் பேசினார் சூர்யா. கூலி வேலை பார்த்து சத்தான உணவை சாப்பிட்டு இத்தனை கஷ்டத்திலும் நந்தகுமார் நல்ல மதிப்பெண்களை பெற்றிருந்தார்.

இப்படி ஒரு நிலையில் அந்த மேடையில் நடிகர் சூர்யா உங்கள் பையன் கண்டிப்பாக டாக்டருக்கு படிப்பான் என்று உறுதியளித்திருந்தார். அவர் சொன்னது போலவே அந்த மாணவருக்கு சென்னை எம்.எம்.சி. மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கி கொடுத்து, அவர் படித்து முடிக்கும்வரை அத்தனை செலவையும் சூர்யாவின் அகரம் கட்டளையை ஏற்று இருக்கிறது. தற்போது நந்தகுமார் மருத்துவம் படித்துவிட்டு பெரம்பலூரில் மருத்துவராக பணியாற்றி வருகிறார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் கூலித் தொழிலாளியின் மகனாக இருந்த நந்தகுமார், தற்போது மருத்துவர் ஆக மாறியிருக்கிறார். சூர்யா செய்திருக்கும் இந்த உதவியை பலரும் பாராட்டி வருகின்றனர்.

பாப்பனப்பட்டு வ.முருகன்

# உலக சினிமா

- செழியன் பாண்டியன்

படம் : உண்டா (மலையாளம்), பார்க்க முடியாமல் தவற விட்ட படங்களில் இதுவும் ஒன்று, இப்போது பார்க்க ஒரு அற்புதமான வாய்ப்பு கிடைத்தது, ஒரு நல்ல திரைப்படத்தை கொரோனா பார்க்க வழி வகுத்துள்ளது. படத்தின் ஆரம்ப காட்சியில் ஒரு குழுவான போலீஸ் அதிகாரிகள் தங்கள் உடமைகளை எடுத்து பாதுகாப்பாக வைத்து கொள்கின்றார்கள் ,அனைவரும் ஒன்று குடி இருக்கும் பொது அவர்களை வழி நடத்தும் உயர் அதிகாரி அவர்களிடம் தேர்தல் நடக்க இருப்பதால் ஒவ்வொரு குழுவாக பிரித்து அவர்களை தேர்தல் நடக்க இருக்கும் இடத்துக்கு அனுப்ப படுகிறார்கள் .

அடுத்த காட்சியில் ஒரு அரசியல்வாதி தனது கட்சி குழு ஒன்றை நடக்கின்றது அங்கு ஒரு திருடன் ஒருவனின் மணி பர்ஸை திருட முயற்சிக்கிறான், அதை ஒரு போலீஸ் ளுஐ பார்கின்றார், அவர் மிக சாதாரண-மாக ஒரு டீகடையில் டீ குடித்து கொண்டு உள்ளார் , அவர்தான் நம் கதையின் நாயகன் மணி சார் (மம்முட்டி) அதை பார்த்த திருடன் அந்த மணி பர்ஸை அதனின் உரிமையாளரிடம் கொடுத்து விட்டுசென்று விடுகின்றான். மணி தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழு சத்தீஸ்கர் சென்று அங்கு உள்ள ஒரு இடத்தில் அவர்களின் பணி தொடங்குகின்றது , பிறகுதான் ஒரு விசியம் தெரியவருகின்றது அந்த இடம் மாவோசிட் ஆதிக்கம் உள்ள இடம் என்று தெரிய வருகின்றது . அங்கு அவர்களை வழி நடத்த ஒரு ஆர்மி மேன்



உள்ளார், அவர் ஒரு மருத்துவர் என்று தெரிய வரும்போது ஒருவன் நீங்கள் மருத்துவர் தானே ஆனால் ஏன் இங்கு ஆர்மியில் உள்ளீர்கள் என்று கேட்க ,அதற்க்கு அவர் எங்கள் குடும்பத்தில் கட்டாயம் யாராவது ஒருவர் ஆர்மியில் இருக்க வேண்டும் என்றும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எனது அண்ணன் இருந்தார் ஆனால் அவர் இப்போது இல்லை அதற்க்கு பதில் நான் உள்ளேன் என்று சொல்கிறான் .

அங்கு திடீர் என்று மாவோஸ்ட் தாக்குதல் நடத்துகின்றார்கள் அதற்க்கு போலீஸ் எதிர் தாக்குதல் நடத்துகின்றார்கள் பிறகு அமைதி ஆகின்றது ,அவர்களிடம் போதிய ஆயுதங்கள் இல்லை என்பதால் சத்தீஸ்கர் அரசிடம் ஆயுதங்கள் கேட்க அதற்கு அந்த அரசு ஆயுதம் கொடுக்க மாறுகின்றது . அதனால் அவர்கள் கேரளா அரசிடம் ஆயுதம் கேட்க ஆயுதம் அந்த அரசு ஆயுதம் கொடுத்து அனுப்புகிறது , இதற்கிடையில் மணியின் குழுவில் ஒருவன் அங்கு வாழும் ஆதிவாசி மக்கள் மீது மாவோஸ்ட் எனா சந்தேக படுகின்றான். இரண்டு போலீஸ் அருகில் உள்ள ஒரு ஆதிவாசி கிராமத்தில் சென்று அங்கு மது வாங்குகின்றார்கள் ,அதில் ஒருவன் ஆதிவாசி வம்சத்தை சார்ந்தவன் என்பதால் மற்றோரு போலீஸ் அவனை ஜாதி பெயர் சொல்லி கேவலப்படுத்துகிறான் அதனால் இருவரும் அடித்து கொல்கின்றார்கள் அங்கு மணி வந்து அவர்களை சமாதான படுத்துகின்றார் . மணியிடம் பிஜு (ஆதி வாசி போலீஸ்) வந்து சார் நான் கேம்ப்க்கு திரும்பி போகிறேன் என்று சொல்கிறான், அதற்கு மணி சார் அவனின் அறைக்கு அழைத்து சென்று அனைவரிடமும் சொல்ல சொல்கின்றார். அப்போது அவன் சொல்ல ஆரம்பிக்கின்றான் இன்று விபத்து நடப்பதற்கு முன்பு, நானும் உன்னி சாரும் சண்டையிட்டோம், என்னுடைய வீடு எங்கே இருக்கின்றது என்று அனைவருக்கும் தெரியும், நான் படித்து முடித்த பின்பு எனக்கு போலீஸ் வேலைக்கு வாய்ப்பு கிடைத்தது, உனக்கு வேலை கிடைத்தால் நமக்கு இந்த சமுதாயத்தில் கொஞ்சம் மரியாதையை (மாற்றம்) கிடைக்கும் என்று என் அம்மா சொன்னாங்க, வேலை கிடைத்த பிற-கும் முந்தைய நிலைமை ஒருபோதும் மாறவில்லை, எல்லோரும் என்னை கேலி செய்யும் போது எனக்குத் தெரியும், நீங்கள் அனைவரும் கொஞ்ச நாளைக்கு தான் என்ன கேலி செய்விங்கனு, சார் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறது என்பதை வேறு யாராவது தீர்மானிக்கும் சூழ்நிலை கூட ஏற்படும் சார் இனியும் என்னால் தாங்க முடியாது ,நான் இங்கு இருந்து போயிடுறேன் , எனக்கு அலுத்து போய்விட்டது, நான் இங்கிருந்து உயிருடன் திரும்பிச் சென்றால் அதுவே போதும், இனி இந்த வேலையைச்



செய்ய மாட்டேன்.நான் இங்க இருந்து போயிடுறேன் அப்போதான் நான் நல்ல இருப்பேன். என பிஜு சொல்லும் பொது ஜாதி எவ்வாறு செயல் படுகின்றது என்பதை தெளிவாக இப்படம் காட்டுகிறது, அவனை மற்ற போலீஸ் அனைவரும் சமாதான படுத்து கின்றார்கள் .

அடுத்த நாள் தேர்தல் ஆரம்பிக்கின்றது, ஓட்டு போட்டு முடியும்போது அரசியல் வியாதி ஆட்களுடன் வந்து கலவரம் செய்ய நினைக்கின்றார்கள், அந்த காட்சியில் மாவோஸ்ட் உருவாகின்றதா அல்லது உருவாக்க படுகின்றதா என்பதை இப்படம் காட்டுகின்றது, மாவோஸ்ட் பகுதி என்று சொன்னாலும் கூட அங்கு உள்ள அரசியல் வாதிகள் அடியாட்களை கையில் கொண்டு அரசியல் செய்யும் விதம் இன்று நடக்கும் சில உண்மைகளை மிக யதார்த்தமாக காட்டுகின்றது, இறுதில் மணி அவர்களுக்கு எதிராக எடுக்கும் ஒவ்வொரு முடியும் கடைசி இருபது நிமிடம் மிக அற்புதம், கடைசியாக தேர்தல் பணி முடித்து விட்டு வீடு செல்கிறாரா இல்லையா என்பதே படம்.

## தமிழகத்தில் இருமொழிக்கொள்கைதான் - முதல்வர் திட்டவட்டம்

சென்னை: 80 ஆண்டுகளாக தமிழகம் இருமொழி கொள்கையை பின்பற்றுகிறது; ஆகையால் புதிய கல்வி கொள்கையில் மும்மொழி திட்டம் என்பதை பிரதமர் மோடி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

தமிழக மக்கள் கடந்த 80 ஆண்டு காலமாக இருமொழி கொள்கையில் உறுதியாக உள்ளனர். இது தொடர்பாக, பல காலகட்டங்களில், தங்களது உணர்வை பல்வேறு போராட்டங்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர். 1963ஆம் ஆண்டைய அலுவல் மொழிகள் சட்டத்தின் 3வது பிரிவில், இந்தியை அலுவல் மொழியாக பின்பற்றாத மாநிலங்களை பொறுத்த வரையில், மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் ஆங்கில மொழியில் தான் இருக்க வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்ப இருந்த போதும், 1965ஆம் ஆண்டில் இந்தியை அலுவல் மொழியாக மாற்ற அப்போதைய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து, மாணவர்களும், மக்களும், தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்களை தீவிரமாக நடத்தினர். மக்களிடையே மும்மொழி கொள்கையைப் பற்றிய கவலைகள் நீங்காததால், பேரறிஞர் அண்ணா, தமிழ்நாடு சட்டப்பேரவையில் 23.1.1968 அன்று ”தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றி விட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது” என்று



வரலாறு போற்றத்தக்கதீர்மானத்தை நிறைவேற்றினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் இந்தி மொழி, பாட திட்டத்தில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணாவால் தெளிவுற உரைக்கப்பட்ட இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதுதான் எம்.ஜி.ஆரின் உறுதியான கொள்கையாக இருந்தது. அதன்படியே, அவர் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, அதாவது, 13.11.1986 அன்று, இரு மொழிக் கொள்கையை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

”இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தியை திணிக்கக் கூடாது என்பதிலும், அவ்வாறு எடுக்கப்படும் முயற்சியை எதிர்த்து முறியடிப்பதிலும் உறுதியாக உள்ளோம்” என்று சூளுரைத்தார் முதல்வராக இருந்த ஜெயலலிதா. மேலும், இந்தியாவில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார் ஜெயலலிதா.



இவ்வாறு எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் இந்தி திணிப்பை ஆணித்தரமாக எதிர்த்து வந்தனர். இப்படிப்பட்ட மாபெரும் தலைவர்கள் வழி வந்த தமிழகஅரசும், மத்திய அரசு, வரைவு தேசிய கல்விக் கொள்கையை வெளியிட்ட போதே, அதில் மும்மொழிக் கொள்கை இடம் பெற்றதை சுட்டிக் காட்டி, அதனை தீவிரமாக எதிர்த்தது. மேலும், தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், இரு மொழிக் கொள்கையையே கடைபிடிப்போம் என உறுதிபட தெரிவித்து 26.6.2019 அன்றே பிரதமரை வலியுறுத்தி நான் கடிதம் எழுதினேன்.

இரு மொழிக் கொள்கையையே தமிழக அரசு தொடர்ந்து கடைபிடிக்கும் என்பதை கடந்த ஆண்டு எனது சுதந்திர தின உரையிலும், சட்டமன்றத்தில் நடைபெற்ற பல்வேறு விவாதங்களின்போதும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன். தற்போது மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையில், மும்மொழி கொள்கை இடம் பெற்று இருந்தாலும், தமிழக அரசு, மும்மொழிக் கொள்கையினை தமிழ்நாட்டில் எப்போதும் அனுமதிக்காது என்றும், இருமொழி கல்விக் கொள்கையை மட்டுமே தொடர்ந்து பின்பற்றும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த மக்களின் உணர்வும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பெரும்பாலான அரசியல் கட்சிகளும், இரு மொழி கொள்கையை பின்பற்றுவதையே கொள்கையாக கொண்டுள்ளனர். இந்த சூழ்நிலையில், மத்திய அரசு அறிவித்த தனது புதிய கல்விக் கொள்கையில் மும்மொழி கல்வி இடம் பெற்றிருப்பது வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கின்றது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வை ஏற்று, மத்திய அரசு அறிவித்த மும்மொழி கொள்கையை மறுபரிசீலனை செய்து, அந்தந்த மாநிலங்கள் தங்களின் கொள்கைக்கு ஏற்ப செயல்படுத்திக் கொள்ள பிரதமரை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் மொழிக்கோ, தமிழர்களுக்கோ, பாதிப்பு ஏற்படும் போது, அந்த பாதிப்பினைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கும் அரசு, தமிழக அரசு தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## இ-பாஸ்’ பெறுவதற்கான வழிமுறைகளை எளிமை முதல்வா எடப்பாடி கே. பழனிசாமி

தமிழ்நாட்டில் ‘இ-பாஸ்’ பெறுவதற்கான வழிமுறைகளை எளிமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 குழுக்கள் அமைக்கப்பட்டு ‘பாஸ்’கள் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதல்வா எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார் முன்னாள் முதல்வாகள் அண்ணா

எம்ஜி.ஆர்,,ஜெயலலிதா ஆகியோரின் கனவு இருமொழி கொள்கை என்பதால், தமிழகத்தைப் பொருத்தவரை அந்த கொள்கை தொடாந்து பின்பற்றப்படும். கரோனா தடுப்புப் பணிகளுக்கு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு பொதுமக்களும் முழுமையாக ஒத்துழைத்தால் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும்.

# செம்மறிகள்

14

**இயக்குனர் ஜேப்பி**

ஆதவன் தன் ஆதிக்கக் கொடியை மெல்லமெல்ல மேலே ஏற்றி மனிதர்களின் நிழல் உருவத்தின் நீளத்தை அவனின் காலடியில் நிறுத்தி அதன் கர்வத்தை கர்ஜனையோடு வெளிப்படுத்தும் அது ஒரு நண்பகல் நேரம்

கிராமத்தின் கூரையில் பட்ட வெப்பத்தின் வேனல் தெருவில் நடந்து வந்த உருமண்னின் முகத்தை தாக்கியிருக்க வேண்டும். தனது கை துண்டால் சுவாசத்தை சலித்து மூக்கின் உள்ளே விட்டார். நெற்றி சுருங்க சிவனாண்யின் வீட்டை நோக்கி வேகநடை போட்டார்

உருமணனின் கையில் கமுதி சந்தையில் வாங்கிய அழுக்கடைந்த பேரிச்சம்பழம் நசநசவென்று ஊறியிருந்தது சர்க்கரை வியாதியில் போராடிக்கொண்டிருக்கும் சாத்தையா கோனுக்கு. இந்த பேரிச்சம் பழம் தான் சாவுமணி என்பதை பாவம் உருமணன் அற-ியும் அளவிற்கு அவர் படித்திருக்கவில்லை அன்றய காலகட்டம் அப்படி அவர் என்ன செய்வார்.



வீட்டருகே வந்த உருமணன் துண்டால் முகத்தை துடைத்தபடி எட்டி உள்ளே பார்த்தார் மரக்கட்டிலில் மரணப் படுக்கையிலிருந்த சாத்தையா கோன-ின் இரும்பல் உள்ளே நான் இருக்கிறேன் என்பதை தெளிவுபடுத்தியது. உள்ளே நுழைந்த உருமணன் ஒருக்களித்து படுத்திருந்த சாத்தையாகோனின் உன்னிப்பாக பார்த்தார் அவரால் வந்திருப்பது உருமண்ன் என்று உணர மட்டுமே முடிந்தது. "கும்பிடுறேன் மச்சான்" என்றபடி கும்பிட்டார் உருமணன் உட்கார சொல்லி சைகை செய்தார் சாத்தையாக்கோன். அருகே அமர்ந்தார் உருமணன் அவர் கண்களில் வியப்பு மனதில் வார்த்தைகள்

எட்டுக் கண்ணும் விட்டெறிய ஏறிமேஞ்சு திரிஞ்ச கோயில்காளை இன்னிக்கி பச்சை வாழை நார் ஆட்டம் பருத்திப் பஞ்சு நூல் ஆட்டம் படுக்கையில் கெடக்குறாரு...

இப்படி நினைத்துக் கொண்டிருந்த உருமணனின் நினைவை கலைத்த சாத்தையாகோன். தட்டுத்தடுமாறி பேச ஆரம்பித்தார்.

" மாப்பிள்ளை உன்னைதான் பார்த்து பே...சணும்னு ரொம்ப நா...ளா நெனைச்சுட்டு இருந்தேன். அதேன் முத்தழகு மயங்கிட்டெ சேதி சொல்லி விட்டேன். வந்துசொண்ணானா.?" சொன்னாரு மச்சான் அத கேட்டுபுட்டுதேன் பெறப்புட்டு வந்தேன்."

சிறிது நேரம் இருவரும் மௌனம் காத்தனர். மெல்ல தனது வலதுகையை கிளப்பிய சாத்தையாகோன்.





உருமணனின் கை மேல் வைத்தார் கெஞ்சுதலான பார்வையோடு உருமணனை ஏறெடுத்து பார்த்தார்.

உருமணா! நா வாழ்க்கையிலெ சொத்தெ மட்டுமில்லே நல்ல பேரக்கூட சம்பாதிக்கலெ. நானும் என் மவனுக்கு அம்மா சொந்தகாரங்கெ கிட்டெ. நாலஞ்சு எடத்துலெ பொண்ணு கேட்டு ஏமாந்து போயிட்டேன். நீனாச்சும் என்னை மனுசனா மதிச்சு. எம் மவனெ உம் மருமவனா ஏத்துக்கு வேணு நெனக்கிறேன் ."

சாத்தையாக்கோனின் கண்கள் கலங்கியிருந்தது. கைகள் நடுக்கத்தில் இருந்தது. அவரின் நிலையை கவனித்த உருமணன்.

"பேசுவோம் மச்சான். பேரிச்சம்பழம் வாங்கந்துருக்கேன் திண்ணுங்க."

பொட்டலத்தை பிரித்தார் ஒவ்வொன்றாக எடுத்து கொடுக்க. வாங்கி வாயில் போட்ட சாத்தையாக் கோன் மெல்லாமலும் பாதி மென்றும் விழுங்கிக் கொண்டிருந்தார். அந்நேரம் உள்ளே நுழைந்தான் சிவனாண்டி. உருமணன் கும்பிட்டு வரவேற்றான் ஓரமாக நின்றான். எப்பமாமா வந்திய?"

" இப்பதேன் மாப்ளெ."

"வீட்டுலெ எல்லாரும் நல்லா இருக்காங்களா?".

" இருக்காக மாப்ளெ."

பேசிக்கொண்டிருந்த மகனை கரிசனத்தோடு பார்த்தார் சாத்தையா அமைதியைக் கலைத்தார் உருமணன்.

அப்ப நா பெறப்புடுகிறேன் மச்சான். அடுத்த வாரம் ஒரு முகூர்த்த நா இருக்கு. மொறப்படி மாப்புளெ தாம்பூலத் தட்டோட வந்தாருன்னா நாள் குறிச்சிறலாம்."

புரியாமல்பார்த்த சிவனாண்டியை. புன்னகையோடுபார்த்தார் சாத்தையாக்கோன். அதை புரிந்து கொண்ட உருமணன்.

என்ன மாப்ளெ அப்படி பாக்குறிய. எம்மக வள்ளிய உனக்கு கட்டிக் குடுத்துர்றதுன்னு பேசி முடிவு பண்ணியிருக்கோம் உனக்கு சம்மதந்தானே.

நீங்க பாத்து எது செஞ்சாலும் எனக்கு சர்தேன்மாமா. நா என்ன தீர்க்கமா பண்ணப் போறேன்"

தொடரும்

# மேஷம்

இந்த மாதத்தில் தொழிலில் போட்டி அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் வேலையை முடிக்க கூடுதல் முயற்சி தேவைப்படும். சில நேரங்களில் தேவையற்ற அலைச்சல் ஏற்படும். ஆரோக்கிய விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். உணவு விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றுவீர்கள். சுப காரிய முயற்சிகள் தள்ளிப்போக வாய்ப்புள்ளது.

# ரிஷபம்

எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். எந்த ஒரு தடை வந்தாலும் அதை சமாளித்து முன்னேறக்கூடிய ஆற்றலும், தன்னம்பிக்கையும் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் வேலையை கவனமுடன் முடிப்பது அவசியம். தொழில், வியாபார ரீதியாக எடுக்கும் முடிவுகள் நன்கு ஆலோசிக்கப்பட்ட பின் எடுப்பது நல்லது.எந்த ஒரு வேலையிலும் சொல்,செயலில் கவனமாக இருப்பது அவசியம். மனக் குழப்பமும், மன அமைதியின்மையும் இருக்கும். அதனால் பதற்றத்தைத் தவிர்ப்பது மிகவும் அவசியம்.

# மிதுனம்

இந்த மாதத்தில் எல்லா விஷயத்தில் சற்று கவனத்துடன் இருப்பது அவசியம். உத்தியோகஸ்தர்கள் தங்கள் இலக்கை முடிக்க நல்ல வாய்ப்பு அமையும், தொழில் முதலீடு செய்பவர்கள் நன்கு யோசித்து செய்வது அவசியம். உடல் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ளவும். முடிந்த வரை பயணங்களை தவிர்ப்பது நல்லது. இந்த மாதத்தில் பொருளாதார வளமும், உடல் பலமும் கூடும். முன்னேற்றமான சூழல் இருக்கும். பணத்தை சேமிக்கும் முயற்சியில் இறங்கவும். உங்களின் அசையும், அசையா சொத்துக்கள் மூலம் அனுகூலம் ஏற்படும்.

# கடகம்

கோபத்தை குறைத்து பொறுமையை கையாள்வது அவசியம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். மற்றவர்களின் தவறுக்கு வீண் பழி ஏற்க வேண்டி வரும். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் வீண் விரயங்களை சந்திக்க வேண்டி வரும். ராகு - கேதுவின் நிலையால் உற்றார் உறவினரிடையே மனக்கசப்பு ஏற்படக்கூடும். சனி பகவானும், உங்கள் ராசியில் இருக்கும் சூரியனுக்கு எதிரில் இருப்பதால் ஆவணி மாதம் ஆரம்பிக்கும் வரை பலன் சுமாராக தான் இருக்கும். சொல், செயலில் கவனம் தேவை. கோபத்தை குறைத்து, குணத்தை அதிகரிப்பதால் எதிலும் நற்பெயர் கிடைக்கும்.



# சிம்மம்

நற்பலன்கள் நிறைய கிடைக்கும். நினைத்த காரியங்கள் செய்து முடிக்கக்கூடிய வாய்ப்பும், தன்னம்பிக்கையும் உண்டாகும். கொடுக்கல் வாங்கல் நல்ல முறையில் நடக்கும். பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். இதனால் கடின வேலைகள் எளிதாக முடியும். பூர்விக சொத்து சார்பாக லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணபதியை வணங்கி வர வல்வினைகள் நீங்கும்.

# கன்னி

இந்த மாதம் மிக நல்ல பலன்கள் கிடைக்கக் கூடும். சுக்கிரன் கர்ம ஸ்தானத்தில் இருப்பதும் சூரியன் தன ஸ்தானத்திலும், பின்னர் தைரிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பண வரவு மிக சிறப்பாக இருக்கும். இதன் மூலம் குடும்ப தேவைகளை தாராளமாக நிறைவேற்ற முடியும். தொழிலில் போட்டிகள் அதிகமாக இருந்தாலும், அதை சமாளித்து முன்னேறுவீர்கள். அதே போல் வியாபரத்தில் நல்ல லாபம் அடையும். உத்தியோகஸ்தர்கள் சரியான நேரத்தில் வேலையை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப காரியங்கள் நடந்தேறும். முருக வழிபாடு முன்னேற்றத்தைத் தரும்

# துலாம்

பொருளாதார விஷயங்களில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள். குடும்பத்தில் உங்களுக்கும், உங்கள் கருத்துக்கும் ஆதரவு கூடும். இதுவரை இருந்த பிரச்னைகளுக்கு நல்ல முடிவுகள் கிடைக்கும். தொழிலில் நல்ல லாபம் ஏற்படும். உங்களின் தேவை-கள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவும், உதவிகரமாக இருப்பார்கள். வேலை விஷயமாக வெளியூர் செல்லும் வாய்ப்பு ஏற்படும். ராகு காலத்தில் அம்மன் வழிபாடு செய்து வர நம்பிக்கையும், நன்மையும் உண்டாகும்.

# விருச்சிகம்

நல்ல அனுகூலமான பலன்களைத் தரும். நல்ல வாய்ப்பும், வருவாயும் தேடி வரும். இதனால் பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். இருப்பினும் ராகு, சுக்கிரன் 8ம் இடத்தில் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். சில எதிர்பாராத பயணங்களால் உடல் அலைச்சல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் நீங்கள் நினைத்த லாபத்தை அடைவீர்கள். குடும்பத்தில் அன்பு அதிகரிக்கும். துணையுடனான நெருக்கும் கூடும்.

# தனுசு

சாதகமற்ற நிலை நிலவும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வெளி உணவுகளை தவிர்ப்பதால் தேவையற்ற உடல் உபாதைகளைத் தவிர்க்க முடியும். எந்த விஷயத்திலும் நிதானமாக செயல்படுவது நல்லது. சில நேரங்களில் திடீர் பயணங்கள் செய்ய வேண்டி வரும். இதனால் அசதி, அலைச்சல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும், மந்தநிலை நீடிக்கும். சோர்ந்து போக வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பணியை செய்து முடிக்க முயல்வது அவசியம். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. கடன் கொடுக்காமல் இருப்பது நற்பலனைத் தரும்.

# மகரம்

நல்ல பலனைத் தரக்கூடிய அமைப்பாகும். இருப்பினும் உடல் நலனில் சற்று கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எந்த விஷயத்திலும் நிதானித்துச் செயல்படுவது அவசியம். பேச்சிலும், செயலிலும் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். தொழிலில் பங்குதாரர் உங்களுடன் சுமுகமாக இருப்பார். உத்தியோகஸ்தர்கள் தங்களின் பணிகளை கவனமாக செய்து முடிக்கக்கூடும். பணம், பொருள் கொடுக்கல் வாங்கலில் அனுகூல நிலை இருக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். உங்களின் சொல், செயலுக்கு

# கும்பம்

எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். தொழிலில் பங்குதாரர் உங்களுடன் சுமுகமாக இருப்பார். உத்தியோகஸ்தர்கள் தங்களின் பணிகளை கவனமாக செய்து முடிக்கக்கூடும். பணம், பொருள் கொடுக்கல் வாங்கலில் அனுகூல நிலை இருக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். உங்களின் சொல், செயலுக்கு குடும்பத்திலும், சமூகத்திலும் நல்ல மதிப்பு மரியாதை உண்டாகும். ஆரோக்கியத்தில் இருந்த தடுமாற்றம் நீங்கி உடல் நலம் மேம்படும். துணையுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்க அன்னியோன்னியம் ஏற்படும்.

# மீனம்

உறவினர்கள், நண்பர்களை அனுசரித்து செல்வது அவசியம். கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்வதும், எந்த செயலிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்கள் அவர்களின் தடைகளை தகர்த்து முன்னேற்றம் அடைவார்கள். போட்டிகளை வெல்வார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் நற்பெயர் பெற வாய்ப்புள்ளது. குடும்பத்தில் இருந்த மனஸ்தாபம் நீங்கி நல்ல ஒற்றுமை இருக்கும். சுப காரிய நிகழ்வுகள் நடக்க வாய்ப்புக்கள் அமையும். ராகு காலத்தில் துர்க்கை அம்மனை வழிபட்டு வர தைரியமும், தன்னம்பிக்கையும் உண்டாகும். காரியத்தில் வெற்றி ஏற்படும்.




# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர் ____________ த.பெ. ____________

நிரந்தர முகவரி ____________

____________

பாலினம் ____________ தொழில் ____________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு (ஆயுள்/ஆண்டு) // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம் ✔

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | – | ரூ.5,000/– | ☐ |
| பத்தாண்டு சந்தா | – | ரூ.2,500/– | ☐ |
| ஆண்டு சந்தா | – | ரூ.250/– | ☐ |
| நன்கொடை | – | ரூ. | ☐ |

**பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி**

திரு/திருமதி ____________

____________

____________

____________

தொலைபேசி எண் ____________ கைப்பேசி ____________ இ.மெயில் ____________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், எண்.11/6ஏ, குமரன் காலனி 3வது தெரு, வடபழனி, சென்னை–600026 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணம்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விவரம்:**

ACCHARAM - Current Account
Acc.No: 6665766161
Indian Bank, Saligramam Branch
IFS Code: IDIB000S082




திருச்செங்கோடு இராமலிங்கம் சுந்தரம் என்னும் **T.R**,சுந்தரம் தனியொருவரின் பெருங் கனவுதான் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ். படப்பிடிப்பு தளம், பாடல் பதிவு செய்வதற்கான அறை, கூடம், திரைப்படத்தைப் போட்டுப்பார்க்க ஒரு அரங்கம் என அனைத்து வசதிகளுடனும், 1935 இல் மாடர்ன் தியேட்டர்ஸ்” நிறுவனம் உருவானது..!

தமிழ்த்திரையுலகில் பல பிரபலங்களை உருவாக்கிய பழம்பெருமை வாய்ந்த சேலம் மார்டன் தியேட்டரில் எம்.ஜி.ஆர் கருணாநிதி மற்றும் ஏ.ஜே.ஜானகி உள்ளிட்ட முன்னால் முதல்வர்கள் நடித்துள்ளனர்.இந்த தியேட்டரில் பணியாற்றியுள்ளார். கண்ணதாசன், மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போன்றோர் மாடர்ன் தியேட்டருக்கு பாடல் எழுதி உள்ளனர்..!

9 மொழிகளில் 118 திரைப்படங்களைத் தயாரித்த பெருமை மாடர்ன் தியேட்டருக்கு உண்டு. 1936-ல் நேருவும், வல்லபாய் படேலும் மாடர்ன் தியேட்டருக்கு சென்று படப்பிடிப்பைக் கண்டு களித்துள்ளனர்..! படப்பிடிப்பு குறிப்பிட்ட தேதியில் தொடங்கி, குறிப்பிட்ட தேதியில் முடியவேண்டும் என்பதில் வு.சு.சுந்தரம் கண்டிப்பாக இருந்தார்..!

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் சுமார் 250 தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். சுந்தரம் தமது நிறுவனத்தில் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல் படுத்தினார். நடிகைகள் உள்ள பகுதிக்கு, நடிகர்கள் போகக்கூடாது. கதை வசனம் முழுமையாகத் தயாரான பிறகுதான், நடிகர் நடிகைகள் யார் என்பது முடிவாகும். நன்றாக ஒத்திகை பார்த்த பிறகுதான் படப்பிடிப்பு தொடங்கும்.இங்கு நடிக்க வந்த நடிகர்கள் கூட ஒரு தொழிலாளர்களைப் போலச் சரியான நேரத்துக்கு





வருவது, கட்டுப்பாட்டோடு பணியாற்றுவது, வீண் வம்பு, விவகாரம் இவற்றில் ஈடுபடாமல் தானுண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது என்று இருந்தார்கள்.

1951-இல் சர்வாதிகாரி,1952-ல் வளையாபதி, 1960-இல் பாக்தாத் திருடன்,

1951-இல் சர்வாதிகாரி,1952-ல் வளையாபதி, 1960-இல் பாக்தாத் திருடன், போன்ற பல வெற்றிப் படங்களை மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தினர் எடுத்தனர்.இந்நிறுவனம் எடுத்த முதல் வண்ணப்படம் அலிபாபாவும் 40 திருடர்களும் ஆகும்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்கள் விவரம் வருமாறு: தட்ச யக்ஞம், கம்பர், தாயுமானவர், மாணிக்கவாசகர், உத்தமபுத்திரன், பக்த கௌரி, தயாளன், மனோன்மணி, சௌசௌ, பர்மா ராணி, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி, ஆதித்தன் கனவு, திகம்பர சாமியார், மந்திரிகுமாரி, பொன்முடி, சர்வாதிகாரி, தாய் உள்ளம், திரும்பிப்பார், இல்லற ஜோதி, சுகம் எங்கே?, கதாநாயகி, மகேஸ்வரி, அலிபாபாவும் 40 திருடர்களும், பாசவலை, ஆரவல்லி, பெற்ற மகளை விற்ற அன்னை, தலைகொடுத்தான் தம்பி, வண்ணக்கிளி, கைதி கண்ணாயிரம், குமுதம், கொஞ்சும் குமரி, அம்மா எங்கே?, வல்லவனுக்கு வல்லவன், வல்லவன் ஒருவன், இரு வல்லவர்கள், எதிரிகள் ஜாக்கிரதை, காதலித்தால் போதுமா, நான்கு கில்லாடிகள், சி.ஐ.டி.சங்கர், ஜஸ்டிஸ் விஸ்வநாதன், கருந்தேள் கண்ணாயிரம் இப்படிப் பல படங்கள் உண்டு.

ஜெய்சங்கரை வைத்துப் பல 007 மாதிரியான துப்பறியும் படங்களையும் **T.R**,சுந்தரம் எடுத்திருக்கிறார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் எடுத்த மொத்த படங்களின் பட்டியல் அந்த நிறுவனத்தின் வாயிலில் பெரிய விளம்பரப் பலகையில் எழுதி வைத்திருந்தார்கள்.

இந்த நிறுவனத்தின் தயாரிப்பு அரங்கில் 1982ஆம் ஆண்டுவரை 150க்கும் மேலான தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, சிங்களம் மற்றும் ஆங்கிலத்திலும் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தமிழ்த் திரைப்படங்களே..!

1963ல் சுந்தரம் மறைந்தார். இன்று மாடர்ன் தியேட்டர்ஸ், சுந்தரம் கார்டன்ஸ் என்ற குடியிருப்புப் பகுதியாக மாற்றம் பெற்றுள்ளது. நுழைவு வாயில் பகுதி மட்டுமே மிஞ்சியிருக்கிறது.,,!

# ஷாந்தனு நடிக்கும் “இராவண கோட்டம்“

மணி ரத்னத்தின் “வானம் கொட்டட்டும்“, விஜய்யின் “மாஸ்டர்“ மற்றும் “முருங்கைக்காய் சிப்ஸ்“ ஆகிவற்றுடன் மேலும் சில நம்பிக்கையூட்டும் படங்களுடன் ஷாந்தனுவுக்கு 2020ஆம் ஆண்டு அமர்க்களமாகத் தொடங்கியது. இந்தப் படங்களைத் தவிர, தற்போது நடித்து வரும் “இராவண கோட்டம்“ திரைப்படம் தனது திரை வாழ்வில் திருப்புமுனையாக அமையும் என்று ஷாந்தனு திடமாக நம்புகிறார்.

இது குறித்து விவரித்த தயாரிப்பாளர் கண்ணன் ரவி, ”பொறுமையும் விடாமுயற்சியும் எத்தகைய தடைகளையும் தகர்த்தெறிந்து இடையூறுகளை இல்லாமல் செய்யும் அதிசயத்தை நிகழ்த்தும்” என்ற ஊக்கமளிக்கும் உன்னதமான பொன்மொழி எப்போதுமே எனக்கு மிகவும் பிடிக்கும். இதன் தாக்கம் எனது தயாரிப்பிலும் சிறப்பாக வெளிப்படுகிறது. கடந்த ஆண்டே “இராவண கோட்டம்“ படத்தை ஆரம்பித்து விட்டோம். செயல் வடிவம் கொடுத்து படத்தை உருவாக்க எங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் அதிக பட்ச உழைப்பைக் கொடுத்து பணியாற்றுகின்றனர். விக்ரம் சுகுமாரனின் வலுவான ஸ்க்ரிப்ட், ஷாந்தனு பாக்கியராஜ் போன்ற திறமை மிக்க நட்சத்திரங்கள் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள், ஆகியவற்றுடன் எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். ஆண்டுக்கு மூன்று மாதங்களே இருக்கும் கடுமையான கோடை கால சூழலில் முழுக் கதையும் நடைபெறும் வகையில் படத்தின் களம் அமைந்திருக்கிறது. கடந்த ஆண்டு நாங்கள் படப்பிடிப்பைத் தொடங்கியபோது மிகவும் சாதகமான தட்ப வெப்ப சூழலே நிலவியதால் மழைக்காலம் ஆரம்பிக்கும் முன்பே



நாங்கள் படப்பிடிப்பை முடித்து விட்டோம். அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாகிவிடக்கூடாது என்பதிலும், படத்தின் உள்ளார்ந்த சாராம்சத்தை சிதைத்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தோம். ஆயினும் இந்த ஆண்டு இதே பருவத்தில் படப்பிடிப்பைத் தொடர திட்டமிட்டிருந்தபோது, உலகையே நிலைகுலையச் செய்த “கோவிட் 19“ பெருந்தொற்றால் அது முடியாமல் போனது. தற்போதைய வியாபார சூழலை நான் நன்கு அறிந்திருக்கிறேன் என்றாலும், ஷாந்தனு மற்றும் விக்ரம் சுகுமாரன் திறமை மீது கொண்ட முழு நம்பிக்கை காரணமாக இந்தப் படத்தில் முதலீடு செய்து, படத்தை எடுக்க இருக்கிறேன். சுமூகமான சூழல் ஏற்பட்ட பிறகு அரசின் அனுமதி கிடைத்ததும், முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நாங்கள் படப்பிடிப்பைத் தொடரவிருக்கிறோம். மேலும் ஷாந்தனு தற்போது கைவசம் வைத்திருக்கும் நம்பிக்கைக்குரிய படங்கள்,





நட்சத்திர ஏணியில் அவரது கிரா·.ப் சீராக மேல் நோக்கி செல்ல உதவும் என்பதால் எனது “இராவண கோட்டம்“ படத்துக்கு அது பெரிதும் பயன்படும்” என்றார்.

நடிகர் ஷாந்தனு பாக்கியராஜ் இது குறித்து விவரிக்கையில் ”இந்த கடுமையான சூழ்நிலையிலும் பொறுமை காத்து, எங்களுக்கு ஆதரவாக இருக்கும் தயாரிப்பாளர் கண்ணன் ரவிக்குதான் எங்கள் குழு முதலில் நன்றி செலுத்த வேண்டும். பல ஆண்டுகளாக எங்கள் குடும்ப நண்பராக இருக்கும் அவர், எனது வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டு எனக்காக பிரார்த்தனை செய்பவர். பெரிய தொழில் முனைவோரான அவருக்கு, சினிமாவுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றாலும் எனக்கு ஒரு திருப்புமுனை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே “இராவண கோட்டம்“ படத்தைத் தயாரிக்க முன் வந்திருக்கிறார். படத்தயாரிப்பு தாமதமாகி நீண்ட போதிலும், பொறுமை காக்கும் அவர், எங்களிடம் ”அவசரம் காட்ட வேண்டாம் சிறப்பான முறையில் படத்தை உருவாக்குங்கள்” என்றுதான் சொல்கிறார். தற்போது சூழ்நிலை காரணமாக நாங்கள் அமைதி காத்து வருகிறோம். “இராவண கோட்டம்“ படத்தைத் தொடங்கும்போது கண்ணன் ரவி சார் இனி உனக்கு நல்ல படவாய்ப்புகள் நிறைய வரும் என்று என்னிடம் சொன்னார். அவர் சொன்னதைப் போலவே “இராவண கோட்டம்“ படம் வெளியாவதற்கு முன்பே, மணி ரத்னம் சாரின் “வானம் கொட்டட்டும்“, விஜய் அண்ணாவின் “மாஸ்டர்“, மற்றும் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவிருக்கும் சில படங்கள் எனக்குக் கிடைத்தது மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இப்போது எனக்கு அவர் அதிர்ஷ்ட தேவதையாகத்தான் கண்ணுக்குத் தெரிகிறார். அது மட்டுமல்ல, ””இராவண கோட்டம்“ படத்திலிருந்து எனக்கு எந்த லாபமும் வேண்டாம். தொடர்ந்து நல்ல படங்களைத் தயாரிக்க நான் போட்ட முதலீடு மட்டும் திரும்ப வந்தால் போதும்” என்று அவர் உறுதிபடக் கூறிவிட்டார். சிக்கல் மிகுந்த இக்கட்டான சூழலிலும் கண்ணன் சார் எங்களுடன் இணக்கமாக இருப்பதற்கும், என் மீதும் விக்ரம் சுகுமாரன் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கைக்காகவும் அவருக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்” என்றார் ஷாந்தனு.

தொடர்
16

# தப்பு முடிந்தால் தப்பு

**CRIME THRILLER**

அசோக் ராஜ்

சாய்ராமும் மூர்த்தியுடன் செல்வது என்று தீர்மானித்ததும், மூர்த்தியைத் தன் திட்டத்தின் ஓர் அங்கமாக்க அவனை மிரட்டினான். முதலில் பயந்து மறுத்த மூர்த்தி வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்டு

““சார் நான் என்ன வேணாலும் செய்யறேன்.. இந்தக் கேஸ்ல என்னை விட்டுடுங்க. ராஜாராமைக் கொன்னது கஜபதி தான்““ என்றான், சாய்ராமை நிஜ போலீஸ் என்று நம்பி.

““கஜபதியா அது யார்?!““ என்ற சாய்ராம், ““அவன் ∴போட்டோ உன் ∴போன்ல இருக்கா?““ என்றும் ஆவலாகக் கேட்டான்.

““சார்.. நாங்க ரெண்டு பேரும் வேற வேற குரூப். அவன் நார்த் மெட்ராஸ்! நான் கோயம்பேடு! அவன் ∴போட்டோல்லாம் என் கிட்ட இல்லை. அவன் தான் போட்டதுனு சொல்லிகிட்டாங்க.. அதுக்கு மேல எனக்குத் தெரியாது. தலைவர் சின்னச் சின்ன வேலைக்குத் தான் என்னைக் கூப்பிடுவார். பெரிய வேலையெல்லாம் அவன் கிட்ட தான்““ என்று சந்தடி சாக்கில் கஜபதியை முடிந்த மட்டும் போட்டுக் கொடுத்தான் மூர்த்தி.

““சரி விடு.. அவனையும் பிடிச்சிடுறேன்““ என்று விட்டு பர்ஸிலிருந்து ஒரு வஸ்துவை எடுத்தான் சாய்ராம். டிடெக்டிவ் வேலைக்கு எதற்கும் தேவைப் படலாம் என்று பர்ஸில் எப்போதோ வைத்த வை∴பை இணைப்புடன் கூடிய பட்டன் கேமரா தான் அது. அதை மூர்த்தியிடம் கொடுத்தான் சாய்ராம். பார்க்க பென் ட்ரைவ் மாதிரி இருந்த அது ஒரு மூலையில் சட்டை பட்டன் போன்ற அமைப்பில் ஒரு சிறிய கேமராவைக் கொண்டிருந்தது.

““என்ன சார் இது?““ என்றான் மூர்த்தி, நிஜமாகவே தெரியாதவனாய்.

““சினிமாவில பார்த்திருப்பே... பட்டன் கேமரா.. இதை உன் சட்டை மேல்பட்டனில் பொருத்திக்க... அண்ணா நகர்ல அந்த இடத்துக்குப் போனதும் இதுல இருக்கிற இந்த பட்டனை அமுக்கு.. கேமரா ஆன் ஆகி எல்லாத்தையும் ரெக்கார்ட் செஞ்சுரும்.. கேமரா செருகியிருக்கிற பதட்டம் உன் முகத்துல தெரியக் கூடாது. எக்காரணம் கொண்டும் இந்த பட்டனை நீ பார்க்கறதோ தொடறதோ கூடாது. உன்னைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரண சட்டை பட்டன் அவ்ளோ தான். நீ எப்போதும் போல கேஷுவலாக இருக்கணும். அங்க என்ன நடக்குது.. அந்த ஆட்கள் யாருனு நான் பார்க்கணும்.. மடத்தனமா வேற ஏதாவது யோசிச்சா மாட்டிப்பே..““

பதட்டத்துடன் அதை வாங்கிப் பார்த்த மூர்த்தி ““சரி சார்.. அப்படியே செய்றேன்““ என்றுவிட்டு அதை மேல் சட்டையில் செருகிக் கொண்டான்.

சாய்ராம் ““முதல்ல இப்ப நீ அங்க எதுக்குப் போறே.. அதைச் சொல்லு““ என்றான்.

முழக்கம் பத்திரிக்கை நிருபர் அமலை பிடித்து வைத்திருப்பதையும், அமைச்சர் ∴போன் செய்ததையும், மேற்கொண்டு அந்தப் பத்திரிக்கையில் அந்தத் தொடர் வராமல் தடுக்க, அவனை அடித்து,



மிரட்டி பயம் காட்ட இருப்பதாகவும் சொன்ன மூர்த்தி...இப்படியெல்லாம் செய்யச் சொல்லி அமைச்சர் சேதுமாதவனே தனக்கு ∴போன் செய்ததையும், அவருடைய ∴போன் நம்பரையும் சாய்ராமிடம் கொடுத்தான்.

““சார் இந்த நம்பர் அமைச்சர் என்னை மாதிரி ஆளுங்ககிட்ட பேசறதுக்கே உள்ள நம்பர்... பொதுவா அவர் நேரடியா என் கிட்ட பேச மாட்டார்... அவர் ஆளுங்க யாராவது தான் பேசுவாங்க.. ரொம்ப முக்கியம்னா என் கிட்ட பேசுவார்.. நான் அடிச்சா எடுக்க மாட்டார்..““

““அப்படீன்னா நீ ஏதாவது அவர் கிட்ட பேசணும்னா என்ன பண்ணுவே..?““

““ஒவ்வொரு தடவையும் எந்த நம்பருக்கு கூப்பிடணும்னு அவரே சொல்லுவார்.. கொஞ்சம் முன்னாடி நான் பேசினப்பக் கூட ஏதாவது டவுட்னா உதயா கிட்ட பேசிக்கச் சொன்னார்..““

““உதயா?““

““அமைச்சரோட மச்சான்..““

““மச்சானா?““

““அவரோட இல்லீகல் கீப்புக்கு தம்பி சார்...““

சாய்ராம் சிரித்தான் ““அவளே பொண்டாட்டி கிடையாது. அவ தம்பி அமைச்சருக்கு மச்சான்?““ என்றான்.

மூர்த்தி அசட்டுத்தனமாக முகத்தை வைத்துக் கொண்டு ““பெரிய இடத்து விவகாரம்““ என்றான்.

““எல்லாரையும் முடிக்கிறேன்..““ என்று என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட் மாதிரி சாய்ராம் சொல்ல...

““ஏன் ஸார்.. இப்ப நான் கேமரா வெச்சுட்டு அங்க போனாலும்.. நீங்க என்ன சார் புதுசா பார்த்துர முடியும்? அந்த நிருபர் அமலை அடிப்போம். அப்புறம் அவனை அரை மயக்குத்துல தூக்கிட்டுப் போய் சிட்டிக்கு ஒதுக்குப்புறமா எங்கேயாவது போட்டுடுவோம். இது தான் எங்களுக்கு கொடுத்திருக்கிற வேலை.. ““ என்ற மூர்த்தியிடம்..

““அந்த உதயா யாரு.. கே.வி யாருனு பார்க்க முடியும்.. அதெல்லாம் உனக்கு எதுக்கு.. நான் சொல்றதைச் செய்.. கிளம்பு.. என் பைக்லயே வா..““ என்று சாய்ராம் மூர்த்தியைத் தள்ளி நகர்த்தினான். மூர்த்தி வந்த பைக் அதே பீடா கடையிலேயே நிற்க, சாய்ராம் பைக்கின் பின்புறம் ஏறிக் கொண்டு ““டிபார்ட்மெண்ட்ல இந்த மாதிரி பைக்கெல்லாம் கொடுக்கறாங்களா..?““ என்றான்.

சாய்ராம் பதில் பேசாமல் முறைத்தான். வாங்கியது பத்தலையா என்பது போல் பார்த்தான். அவன் பம்மிக் கொண்டு வண்டியில் ஏற, சாய்ராம் அண்ணா நகர் நோக்கிப் பறந்தான்.

அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டர் பெருமாளிடம் நடந்ததை எல்லாம் கூறி அவரைக் கையோடு அழைத்துக் கொண்டு அண்ணா நகர் நோக்கிப் புறப்பட்டான் குபேர்.

பெருமாளின் பொலேரோ ஜீப்பில் இருவரும் அண்ணா நகர் நோக்கி வரும் போது குபேர் தீபிகாவுக்கு ∴போன் செய்து அவளும் அவள் குடும்பத்தாரும் சாய்ராம் வீட்டிற்கு வந்துவிட்டதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

நடந்தவற்றை தீபிகாவிடம் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, ““பயப்பட வேண்டாம். யார் வந்தாலும் கதவைத் திறக்க வேண்டாம்..““ என்றான்.

∴போனை வாங்கிப் பேசிய சதாசிவம் ““என் பையன் எங்கே?““ என்றார்.

“∴போன்ல சொல்ல முடியாது சார்.. பயப்படாதீங்க.. மறுபடி பேசறேன்..““ என்றுவிட்டு வைத்துவிட்டான் குபேர்.

அண்ணா நகரில் 13வது குறுக்குத் தெருவில் நடுவில் சிறிய தெருவில் கார்னர் கட்டிடமாக இருந்தது அந்த அபார்ட்மெண்ட். எந்தக் கட்டிடம் என்பதை இருபது அடி தள்ளியிருக்கும் போதே மூர்த்தியிடம் கேட்டு தெரிந்து கொண்டு, பைக்கை அங்கேயே நிறுத்தினான் சாய்ராம்.

““நீ போ.. உன் பைக்கை ஷெட்ல கொடுத்திருக்கேன்னு சொல்லிக்கோ.. கேமராவை இங்கேயே ஆன் பண்ணிக்கோ.. சொதப்புனே.. செத்தே..!““ என்று மூர்த்தியை மிரட்டி அனுப்பிவிட்டு தெருவோரமாக இருந்த புங்கை மரத்தின் அடியில் சற்றே மறைந்து நின்று கொண்டான் சாய்ராம்.

மூர்த்தி பயந்து கொண்டே சென்றான். வீட்டை அடைந்து கதவைத் தட்டியதும் உள்ளே இருந்து ““யாரது?““ என்று குரல் வந்தது.

குரலைப் பார்த்தால் உதயாவின் கையாள் டேவிட்டின் குரல் போல் தெரியவே ““டேய் டேவிட்.. நான் தான் மூர்த்தி.. கதவைத் திறடா..““ என்றான் மூர்த்தி.

டேவிட் கதவவைத் திறந்து மூர்த்தி உள்ளே சென்றதும், உதயா ஏறத்தாழ மூர்த்தியை அடிக்கக் கை ஓங்கினான்.

“மடையா.. ஏண்டா இவ்ளோ லேட்..?““ என்ற உதயாவின் முகம் கேமராவில் நன்றாகத் தெரியும்படி திரும்பி நின்று கொண்ட மூர்த்தி, சொன்னான்...

““அண்ணே.. அதான் சொன்னனே சின்ன ஆக்ஸிடெண்ட்னு.. சரி விடுங்கண்ணே... எங்க அந்தப் பய.. என்ன பண்ணனும் அவனை?““

““அவனை நீ என்ன பண்றது..? நாங்களே வெளுத்துட்டோம். மயக்கத்துல இருக்கான். அவனை தெளியவெச்சு.. வாயைக் கட்டி.. எங்கேயாவது அவுட்டர்ல போட்டுட்டு வந்துடு.. ““ என்ற உதயாவிடம்.

““சரிண்ணே.. கே.வி அண்ணே எங்க?““ என்றான்.

““உனக்காக வெயிட் பண்ணிட்டு இப்பத் தான் போனார்.. சரி.. நான் கிளம்பறேன். நீ இப்பவே போறியா.. இல்லை சாயங்கலாம் இருட்டின உடனே போறியா?““ கேட்டான் உதயா.

““எதுக்குண்ணே அவ்ளோ நேரம்.. இது மதியான நேரம் தான். சந்தடியில்லாம எங்கேயாவது புதர்ல போட்டுடறேன். மயக்கம் தெளிஞ்சு அவனே போய்க்குவான்.““

““சரி. உன் இஷ்டம். இடைல மயக்கம் தெளிஞ்சுட்டா.. மறுபடி அடிங்க.. இனிமே அவன் எந்த பத்திரிக்கைலயும் வேலை பார்க்கக் கூடாது. விடிஞ்சா சொந்த ஊருக்கு ஓடிடணும்..““ என்ற உதயா இருபதாயிரம் ரூபாயை மூர்த்தியிடம் கொடுத்துவிட்டு...

““பார்த்து ஜாக்கிரதை! முடிச்சிட்டு சொல்லு. அந்தப் பொண்ணு தீபிகா வீட்ல போய் அவ அப்பா அம்மாவைக் கொஞ்சம் பயம் காட்டி வைக்கணும்““ என்றான் உதயா.

எல்லாம் பென் ட்ரைவ் கேமராவில் பதிந்து கொண்டிருப்பதை உணர்ந்த மூர்த்தி வேண்டுமென்றே உதயாவின் வாயைக் கிளறும் விதமாக ““சின்னச் சின்ன வேலைய என் கிட்ட கொடுக்கறீங்க.. ஏதாவது சம்பவம்னா மட்டும் கஜபதியைக் கூப்பிட்டுக்கறீங்க..““ என்று அங்கலாய்ப்பாகச் சொன்னான்.

இதைக் கேட்டு மெலிதாகச் சிரித்த உதயா ““கவலைப்படாதேடா.. இன்னொருத்தன் முளைச்சிருக்கான்ல.. அவனையும் கூடிய சீக்கிரம் முடிக்கிற மாதிரி தான் இருக்கும். அந்த வேலையை உன் கிட்டயே கொடுத்துடறோம், கஜபதி மாதிரியே பிசிறில்லாம செஞ்சிடு. ஓகேவா? சமயம் வரும் சொல்றேன். அதுவரை பொறுமையா இரு!““ என்றான்.

“சரி“ என்று சொல்லிவிட்டால் அதுவும் கேமராவில் பதிவாகிவிடும் என்று பயந்த மூர்த்தி தலையை மட்டும் ஆட்டினான். இவை எல்லாவற்றையும் ட்ரான்ஸ்மீட்டர் உதவியுடன் தன் மொபைலில் இணைத்துப் பார்த்துக் கொண்டிருந்த சாய்ராம் உதயா அந்த வீட்டிலிருந்து வெளியேறுவதைப் பார்த்தான். அவன் வெளியேறியதும் மூர்த்தி திரும்பி நிருபர் அமல் அருகே செல்வதை கேமரா வழியே பார்த்துக் கொண்டிருக்கும் போதே உதயா அந்த அபார்ட்மெண்ட்டிலிருந்து வெளியே வருவதை தூரத்திலிருந்தே ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் வெளியே வந்து, வெளியே நின்ற கருப்பு நிற ஸ்கோடா காரில் கிளம்புவதை தூரத்திலிருந்து பார்த்த சாய்ராம் கேமராவில் பார்த்த உருவத்தோடு ஒத்துப் பார்த்து “இவன் தான் உதயா“ என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

காரில் சீறிக் கொண்டு கிளம்பிய உதயா, மரத்துக்குப் பின் நின்றிருந்த சாய்ராமைப் பார்க்கவில்லை. கார் நம்பரைக் குறித்துக் கொண்டு பெருமாளுக்கும், குபேருக்கும் வாட்ஸ் அப் செய்துவிட்டு, பெருமாளுக்கு ∴போன் செய்தான்.



““சார்.. வாட்ஸ் அப்ல ஒரு கார் நம்பர் அனுப்பியிருக்கேன் பாருங்க.. அந்த நம்பர் போட்ட ப்ளாக் ஸ்கோடால தான் ராஜாராமைக் கொன்ன மெயின் அக்யூஸ்ட் போறான். உதயானு பேரு..““

““ஆமா.. ஷைலஜா தம்பி. அமைச்சர் சேது மாதவனோட இல்லீகல் மச்சான்...““ என்றார் சப் இன்ஸ்பெக்டர் பெருமாள் அலட்சியமாக.

““சார் தெரியுமா உங்களுக்கு?““

““அவனை நல்லாத் தெரியும். அவன் தான் கொன்னாங்கறதுக்கு சாட்சி வேணுமே.. நீ எதையும் புதுசா கண்டுபிடிச்சிடலை சாய்ராம்.. இப்ப நீ எங்க இருக்கே?““

““அண்ணா நகர்ல பதிமூணாவது குறுக்குத் தெருல நிக்கறேன். பக்கத்துல ஒரு வீட்ல தான் உதயாவோட ஆளுங்க முழக்கம் பத்திரிக்கை நிருபர் அமலை பிடிச்சு வெச்சிருக்காங்க.. நான் மைக்ரோ கேமரா மூலமா அங்க நடக்கறதை ரெக்கார்ட் செஞ்சிருக்கேன். மூர்த்திங்கிறவனை பயன்படுத்திக் கிட்டேன். அதுல கூட ராஜாராம் பத்தி உதயா பேசின வலுவான ஆதாரம் இருக்கு““ என்றான் சாய்ராம்.

““ஆஹா.. கிரேட் ஜாப் சாய்ராம். ஆனா நீ ரெக்கார்ட் பண்ணி வெச்சிருக்கிறதைக் கூட ∴பேக்னு சொல்லி தப்பிச்சிடுவாங்க.. இன்னும் ஏதாவது வலுவா மீடியால வர்ற மாதிரி ஆதாரம் திரட்டணும்.““

““பண்ணிடலாம் சார்.. நிச்சயமா அவங்களைப் பிடிக்கலாம். சரி நீங்க போலீஸ் ஜீப் இல்லாம வேற சாதாரண ஜீப்ல ம.∴ப்டில இங்க வர முடியுமா?““ கேட்டான் சாய்ராம்.

““ஏன்?““

““ஒரு ஐடியா இருக்கு.. குபேரும் நீங்களும் வாங்க.. அந்த கன்?““

““இருக்கு..““““நல்லது. அதையும் எடுத்திட்டு வாங்க.. டிபார்ட்மெண்ட்ல உங்க பேர் டேமேஜ் ஆகாது.



பயப்படாதீங்க..?““ என்று நம்பிக்கையுடன் பேசிய சாய்ராமின் துணிச்சலை சற்றே வியந்த பெருமாள் ““எனக்கு ஒண்ணும் பயமில்லை““ என்றார் போலீஸ் துடுக்குடன்.

““இருபது நிமிஷத்துல அங்க இருப்போம்““ என்ற பெருமாள் சொன்னது போலவே சரியான நேரத்தில் சிமெண்ட் நிற இன்னோவா காரில் வந்து இறங்கினார். கூடவே குபேரும்.

அதே மரத்தின் அருகில் நின்றிருந்த சாய்ராமிடம் ““ஹலோ டிடெக்டிவ்.. என்ன ப்ளான்?““ என்றான் குபேர்.

பெருமாள் ““கார் என் ப்ரெண்டோடது. இது போதும்ல.. சொல்லு.. என்ன ப்ளான்?““ என்றார்.

““நிருபர் அமலை ஒரு பாதுகாப்பான இடத்துக்கு அழைச்சிட்டுப் போயிடுவோம். அவன் முக்கியமான சாட்சி.. எல்லா மீடியா முன்னாடியும் அவனை பேசச் சொல்லுவோம்.““ சற்று ரகசியக் குரலில் சொன்ன சாய்ராமிடம்

““எப்படி?““ என்றார் பெருமாள்.

““சிம்பிள். உள்ள இருக்கிற மூர்த்தி இப்ப நம்ம ஆள். அவன் கிட்ட ∴போன் போட்டு அமலை தனியா தூக்கிட்டு வரச் சொல்லுவோம். அமலையும் மூர்த்தியையும் இந்த வண்டில ஏத்திகிட்டு கிளம்பிடுவோம். உதயா, கஜபதி எல்லாரையும் வசமா மாட்ட வைக்கிறதுக்கு ரெண்டு பேரும் யூஸ் ஆவாங்க.. ““

““நல்ல ஐடியா தான்.. இந்தா இதை வெச்சுக்க.. பி கேர்∴புல் எப்படி யூஸ் பண்ணனும்னு தெரியும்ல..?““ என்று ஒரு பிஸ்டலைக் கொடுத்தார்.

““9ஆஆ பிரவுனிங் ஹை பவர்?““ என்றான் சாய்ராம்.

““பிரில்லியண்ட்... இதெல்லாம் எப்படி?““

““கற்றது கூகுளளவு““ என்று கண்ணடித்தான் சாய்ராம். இருவரும் சிரித்துக் கொண்டே ““ கூகுளுக்குத் தெரியாதது.. கடவுளுக்கும் தெரியாது இல்ல?““ என்றார் பெருமாள்.

““சின்னத் திருத்தம்.. கடவுளுக்கு தெரியாததும் கூகுளுக்குத் தெரியும்““ என்றான் சாய்ராம்.

இதைக் கேட்டு பெருமாள் இன்னும் பலமாகச் சிரிக்க பாதி புரிந்து மீதி புரியாமல் நின்றிருந்த குபேர் ““சார் இங்க இப்ப எதுக்கு வந்திருக்கோம்.. இப்படி ஜோக்கடிச்சு சிரிக்கவா?““ என்றான்.

““யெஸ்.. பேக் டு சீரியஸ் மோட்! ஒரு ப்ளானை நீயே சொல்லு சாய்ராம்..““ என்றார் பெருமாள்.

““மூர்த்திக்கு ∴போன் போடறேன்.. ஸ்பீக்கர்ல போடறேன்.. உங்களுக்கே புரியும்““ என்றுவிட்டு மூர்த்திக்கு ∴போன் செய்தான் சாய்ராம்.

எதிர் முனையில் கிணற்றடியில் நின்று பேசுவது போல் பேசினான் மூர்த்தி ““ஹலோ.. சார்.. சொல்லுங்க சார். இப்ப தான் உதயா போறார்..““

““பார்த்தேன். அவனை சுத்தி வளைக்க ஏற்பாடு பண்ணிட்டேன். யாருக்கும் கேட்காத இடத்துக்கு வந்து பேசு““ என்றான் சாய்ராம்.

““சார் நீங்க ∴போன் போட்ட உடனே பாத்ரூம் வந்துட்டேன் சார்““

““சரி, அந்த அமலை என்ன பண்ணப் போறீங்க?““

““நானும் இன்னொருத்தனும் சேர்ந்து தூக்கிட்டுப் போய் சிட்டிக்கு அவுட்டர்ல போட்டுட்டு வந்துடலாம்னு



இருக்கோம் சார். அது தான் உதயா ஆர்டர்!““

““இனிமே உதயால்லாம் உனக்கு ஆர்டர் போட முடியாது. அவனே எங்கிட்ட மாட்டி என்கவுண்ட்டர்ல சாகப் போறான்““

““சார் என்னை ஒண்ணும் செஞ்சுடாதீங்க.. நான் இந்த விஷயத்துல அக்யூஸ்டே இல்ல.. உண்மையான அக்யூஸ்ட் கஜபதி! ஆனாலும் நான் அப்ரூவரா மாறிட்டேன்““ மூர்த்தி பேசியதில் இருந்த தர்க்கம் அவர்கள் மூவரையும் சிரிக்க வைத்தது.

““ டேய் நான் சொல்றதை ஒழுங்கா கேட்டின்னா.. உனக்கு ஒரு பிரச்சனையும் வராது.““

““அதைத் தானே செஞ்சுட்டு இருக்கேன். என்ன பண்ணனும் சொல்லுங்க..?““

““நீ மட்டும் எப்படியாவது அமலைத் தூக்கிட்டு தெரு முக்குல நான் நிக்கற இடத்துக்கு வந்துடு. இங்க கார் இருக்கு. நாம வேற இடத்துக்குப் போறோம்““

““எங்க சார்?““

““என் கிட்டயே கேள்வி கேட்கறியா..? சொல்றத செய்டா““

““எப்படி சார்.. இங்க ஏற்கனவே மூணு தடியனுங்க இருக்கானுங்க.. கூடவே வர்றேன்னு சொல்லுவாங்க..““

““அது உன் பாடு.. சரியா பத்து நிமிஷத்துல அவனை மயக்கம் தெளிய வெச்சோ, தெளிய வைக்காமலோ இங்க அழைச்சிட்டு வரணும். அவ்வளவு தான். வைக்கிறேன்““ என்று கறாராகச் சொல்லிவிட்டு ∴போனை வைத்தான் சாய்ராம்.

““நமக்கு ஒரு அடிமை சிக்கிட்டான்..““ என்றான் குபேர்.

(தொடரும்)

## எந்த ராசிக்கு எந்த முருகன் கோயில் சிறப்பு...!!

எல்லா முருகன் கோவிலும் சிறப்புதான்...

முருகன் என்றாலே சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன்மையான கோயில்..

மயிலம் சுப்பிரமணியர் கோயில்

செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது.

திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில்.

ஒரு முறை சென்று வாருங்கள்...

வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

நிற்க.....

ராசிப்படி முருகன் கோயில்கள்..

கொடைக்கானல் தாண்டுகுடி --- மேஷம்

சுவாமிமலை--- ரிஷபம்

செவலூர் பூமிநாதேஸ்வரர் --- மிதுனம்

பழனி முருகன்---கடகம்

திருபரங்குன்றம் முருகன் ---- சிம்மம்

திருசெந்தூர் முருகன் --- கன்னி

வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி ---- துலாம்

மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர் □ விருச்சிகம்

திருத்தணி □ தனுசு

வயலூர் முருகன் --- மகரம்

ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில் □ கும்பம்

திருவக்கரை வக்ர பத்ர காளி --- மீனம்

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை , குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை பல நிச்சயம் உண்டு.

**M.G.R.** படங்களின் படப்பிடிப்பு துவங்குவதற்கு முன், படத்தில் நடிக்க இருக்கும் நடிகர், நடிகையர் யார் என்பதை தேர்வு செய்யும் பொறுப்பை பெரும்பாலும் அவரிடமே தயாரிப்பாளர்கள் விட்டுவிடுவது வழக்கம். எம்.ஜி.ஆர். குறிப்பிடும் நடிகர்கள் பட்டியலில் முக்கியமாக இடம் பெறுபவர் பண்பட்ட நடிகரான வி.எஸ்.ராகவன்.

எம்.ஜி.ஆரின் 100-வது படமான 'ஒளி விளக்கு' படத்தில்தான் முதன்முத லில் அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு வி.எஸ். ராகவனுக்குக் கிடைத் தது. அதன்பிறகு, 'எங்கள் தங்கம்', 'சங்கே முழங்கு', 'உரிமைக்குரல்' உட்பட எம்.ஜி.ஆர் நடித்த கடைசி படமான 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரை பல படங்களில் அவரோடு வி.எஸ்.ராகவன் நடித்துள்ளார்.

எம்.ஜி.ஆர். படங்களில் நடிக்க நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆர்வம் காட்டுவார்கள். காரணம், மற்ற படங்களில் கிடைப்பதை விட, அவர் நடிக்கும் படங்களில் கூடுத லான சம்பளம் கிடைக்கும். அதோடு, பேசியபடி சக கலைஞர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்பதை எம்.ஜி.ஆர். உறுதிப்படுத்திக் கொள் வார்.

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தில் நடிக்க வி.எஸ்.ராகவனுக்கு குறிப்பிட்ட தொகை சம்பளமாக நிர்ண யிக்கப்பட்டது. படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, சம்பளத்தை குறைத்துக் கொள்ளுமாறு தயா ரிப்பு தரப்பில் இருந்து வி.எஸ்.ராகவ னுக்கு கோரிக்கை விடப்பட்டது. அவருக்கோ தர்மசங்கடம். தனது நிலையை கவிஞர் வாலியிடம் கூறினார். உடனே, வாலி ஒரு யோசனை கூறினார்.

அந்த யோசனையை வி.எஸ்.ராகவன் செயல்படுத்தினார். வாலியின் யோச னைப்படி தயாரிப்பு தரப்பிடம் வி.எஸ். ராகவன் ஏவிய அஸ்திரம் இதுதான். "என் சம்பளம்



எம்.ஜி.ஆரின் ஒப்புதலோடு முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர் முடிவு செய்த தொகையைவிட குறை வாக நான் வாங்கிக் கொண்டால் அவர் வருத்தப்படுவார். அவருக்கு நான் என்ன பதில் சொல்வது?" என்றார். மறுபேச்சு இல்லாமல் ஏற்கெனவே பேசிய சம்பளமே அவருக்கு கிடைத்தது.

வி.எஸ்.ராகவனின் தாயார் உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். தாயாரை கவனித்துக் கொள்வதற்காக மருத்துவமனையில் வி.எஸ்.ராகவன் இருந்தபோதுதான் இயல், இசை, நாடக மன்றத்துக்கு கவுரவச் செயலாளராக அவரை எம்.ஜி.ஆர். நியமித்தார்.

அந்த சமயத்தில் எம்.ஜி.ஆரின் உதவியாளர் ஒருநாள் திடீரென வி.எஸ்.ராகவன் வீட்டுக்கு வந்து அவர-டம் ஒரு பெரும் தொகையை கொடுத்து, "உங் கள் தாயாரின் மருத்துவ செலவுக்காக எம்.ஜி.ஆர். கொடுக்கச் சொன்னார்" என்றார். அதை ஏற்க மறுத்த வி.எஸ்.ராகவன், "இந்தப் பணத்துக்கு இப்போது அவசியம் இல்லை. என்னோட நன்றி யைத் தெரிவித்து பணத்தை திருப்பி அவர்கிட்ட கொடுத்துடுங்க" என்றார்.

'நாம் கொடுக்கும் பணத்தை மறுக் கிறாரே? நம்மை வி.எஸ்.ராகவன் நெருக்கமாக நினைக்கவில்லையோ? ' என்று எம்.ஜி.ஆருக்கு அவர் மீது வருத் தம். அரசின் இயல், இசை, நாடக மன்றத் தின் செயலாளர் என்ற முறையில் முதல் வர் எம்.ஜி.ஆரை சந்தித்தபோது வி.எஸ்.ராகவன் தனது நிலையை விளக்கினார்.

"உங்களுக்குத் தெரியாதது இல்லை. என் தாயாரின் மருத்துவ செலவுக்கு நான் கேட்காமலேயே பெரிய தொகையை கொடுத்து அனுப்பினீர் கள். என் தாயாருக்கு உடல்நிலை சரியாகிவிட்டது. வீட்டுக்கு வந்துவிட்டார். இனி மருத்துவ செலவு கிடையாது. அப் படியிருக்கும்போது, தாயாரின் மருத் துவ செலவுக்காக என்று நீங்கள் அனுப் பிய பணத்தை நான் ஏற்றுக் கொள்வது சரியாக இருக்காது என்பதால்தான் திருப்பி அனுப்பினேன்" என்று வி.எஸ். ராகவன் கூறினார்.

அவரது விளக்கத்தை பொறுமை யாகக் கேட்ட எம்.ஜி.ஆர்., அவரை மன தார பாராட்டினார். உணர்ச்சிவசப்பட்ட ராகவன், "எனக்கு ஏதாவது கஷ்டம் என்றால் உங்களிடம்தான் வருவேன். வேறு யாரிடம் போவேன்?" என்றதும் எம்.ஜி.ஆர் அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

ஆரம்ப காலத்தில் ஏச்சுக்களையும் பேச்சுக்களை யும் உரமாகக் கொண்டே வளர்ந்த எம்.ஜி.ஆருக்கு சக நடிகர்கள் யாரையும் மற்ற வர்கள் கிண்டல் செய்வதோ, குறை கூறுவதோ பிடிக் காது. புதிய நடிகர் களை உற்சாகப் படுத்தி வாழ்த்து வார். வி.எஸ்.ராக வனும் எம்.ஜி.ஆரும் கலந்து கொண்ட ஒரு படப்பிடிப்பு.

காட்சிப்படி மாடிப்படி களில் இருந்து எம்.ஜி.ஆர். இறங்கி வரவேண்டும். அப் போது, வாசலில் வரும் தபால்காரர் 'சார் போஸ்ட்' என்று கூறி எம்.ஜி.ஆரிடம் தபாலைத் தர வேண்டும். தபால்காரர் வேடத்தில் நடித்தவர் புதுமுக நடிகர். 'சார் போஸ்ட்' என்ற இரண்டே வார்த்தைகள்தான் அவருக்கு வசனம். என்றாலும் பதற் றத்தில் இருந்தார். "தம்பி, எம்.ஜி.ஆரு டன் நடிக்கிறே. ஜாக்கிரதை" என்று இயக்குநர் ப.நீலகண்டன் வேறு எச்சரித் ததில் அவரது பதற்றம் அதிகரித்தது.

படப்பிடிப்பு தொடங்கியது. திட்டமிட்ட படி, எம்.ஜி.ஆர். புயலாக மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்தார். பதற்றத்தில் இருந்த தபால்காரராக நடித்த புதுமுக நடிகர், எம்.ஜி.ஆரைப் பார்த்து "சார் போஸ்ட்" என்று சொல்வதற்கு பதிலாக, "சார் பேஸ்ட்" என்று சொல்லிவிட்டார். செட்டில் சிரிப்பலை எழுந்தது. அதை அடக்கியபடி ஒலித்தது எம்.ஜி.ஆரின் குரல். "நிறுத்துங்க. ஒரு நடிகர் தப்பு பண் ணிட்டா இப்படித்தான் சிரிக்கிறதா? நாம எல்லாம் தப்பே பண்ணலையா? யாரை யும் கிண்டல் பண்ணாதீங்க" என்று வெடித்தார். செட்டில் மயான அமைதி!

பின்னர், அந்த புதுமுக நடிகரை தனியே அழைத்துச் சென்ற எம்.ஜி.ஆர்., அவரது தோளில் கைபோட்டபடி, "கவ லைப்படாதீங்க. சரியா நடிங்க. உங்க ளால் முடியும்" என்று உற்சாகப்படுத்தி னார். அவர் கொடுத்த ஊக்கத்தில் அந்த நடிகர் சரியாக நடித்தார். ஷாட் ஓ.கே. ஆனது. உணர்ச்சிவசப்பட்டு காலில் விழுந்த நடிகரைத் தூக்கி வாழ்த்திய எம்.ஜி.ஆரின் பண்பைப் பார்த்து வி.எஸ். ராகவன் சிலிர்த்துப் போனார்.

எம்.ஜி.ஆரின் குரல் எப்போதுமே சமுதாயத்தில் ஏளனத்துக்கு உள்ளாகி கடை நிலையில் இருக்கும் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஆதரவாகத்தான் ஒலிக்கும். அது உரிமைக்குரல்!

# மனசு

-விஜி முருகநாதன்

வேணிக்கு மனசுக்குள் கோபம் பொத்துக் கொண்டு வந்தது .அவள் கணவன் சேகருக்கு அன்று நல்ல காய்ச்சல்.அனத்திக் கொண்டு கிடந்தான். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னான்.

ஐய்யா! கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு எல்லாம் போக மாட்டார்...பிரைவேட் ஆஸ்பத்திரிக்குத்தான் கூட்டிட்டு போகனுமாம்..!"

சேகருக்கு சினிமா தியேட்டரில் டிக்கெட் கிழிக்கற வேலை.வாங்கிய சம்பளத்தில் பத்து ரூபாய் கூட வீட்டிற்கு கொடுக்க மாட்டான்.குடிப்பான்.மீதியை சோக்கா டிரஸ் பண்ணிக்குவான்.

இவன் டிரஸ் பண்றதுல மயங்கி, இவன் கூட ஓடி வந்து கல்யாணம் கட்டிகிட்டதுக்குத்தான், வேணி இப்ப நல்லா அனுபவிக்கிறா.

நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து, அவள்தான் அவனுக்கும் அவர்கள் குழந்தைக்கும் சோறு போட்டு வந்தாள்.பத்தாதற்கு,வாங்குகிற சம்பளத்தில் ஒரு ரூபாய் குறைந்தாலும் அடி உதைதான். அந்த வயித்தெரிச்சலில்தான், எப்படியோ தொலையட்டும் என்று விட்டுவிட்டு வந்து விட்டாள்.

வேலை செய்தாலும், மனசுக்குள் பொறுமிக்கிட்டேதான் இருந்தாள்.“இவன நம்பி வந்ததுக்கு பாழுங்கிணத்துள குதிச்சிருக்கலாம்..!ஒத்தக் காசு கொடுக்க வக்கில்லைன்னாலும், பேச்சுக்கு ஒன்னும் குறைச்சலில்லை...' என்று பல்லை நறநறத்தாள். (மனதிற்குள்தான்.)

வேலை முடிந்து வீட்டுக்குக் கிளம்பினாள். எஜமானியம்மாள், "என்ன




வேணி... வேலை முடுஞ்சுதா?" என்றாள்.

"ஆச்சும்மா..!அப்புறம்..." என்றாள் வேணி,தயங்கியபடி.

"என்னம்மா...சொல்லு..!"

"அம்மா!புருஷனுக்கு உடம்பு சரியில்லை... ஆஸ்பத்திரிக்குக்கூட்டிட்டிப் போகணும்...ஒரு ஐந்நூறு ரூபாய் தாங்கம்மா...அடுத்த மாத சம்பளத்துல கழிச்சுக்குங்க..." என்றாள்.

"முன்பணம் வாங்காமல் உன்னால இருக்க முடியாதே..." என்றபடி. பணம் எடுக்கப் போன எஜமானிக்காகக் காத்து நின்ற வேணி, மறுபடியும் புருஷனை மனசுக்குள் வசை பாட ஆரம்பித்தாள்.



# ஸ்மார்ட் போன் ஆபத்து

கவர்ச்சியான பெயரை சுமக்கும் இந்த ஸ்மார்ட்போன்களால் மகிழ்ச்சி ததும்பிய பல இல்லங்கள் நிம்மதியை இழந்து தவிக்கின்றன. பல தம்பதியினர் மகிழ்ச்சியை தொலைத்து தேடிக்கொண்டு இருக்கிறார்கள். குழந்தைகள் முதல் முதியோர் வரை யாரிடமும் குதூகலம் இல்லை. காரணம் நன்மைகளை அள்ளித்தரும் ஸ்மார்ட்போன்கள்தான், கூடவே தீமைகளையும் அன்பளிப்பாக வழங்குகின்றன. அனைத்தும் அறிந்தும் ஸ்மார்ட்போன்கள் இல்லாமல் யாரும் இல்லை. அதை சரியாக பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் சொற்பமாகவே இருக்கிறது.

ஸ்மார்ட்போன்களை பல வழிகளில் தவறாக பயன்படுத்த முடியும். குறிப்பாக பெண்களின் அந்தரங்கங்களை வெளிச்சம்போட்டு காட்டும் செயலிகள் (ஆப்) கயவர்கள் பலரால் பயன்படுத்தப்படுகின்றன. இக்கயவர்களின் குறிக்கு சிறுமிகள், பள்ளி, கல்லூரி மாண-விகள், இல்லத்தரசிகள் என யாரும் விதிவிலக்கல்ல.

தங்களை அறியாமலே கயவர்களுக்கு சில பெண்கள் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் ஆபத்தை உணராமல் தங்களின் ரகசிய புகைப்படங்களை, வீடியோக்களை செல்போன்களில் வைத்திருக்கிறார்கள். சிலர் தங்களின் காதலனுக்காக ரகசிய புகைப்படம், வீடியோக்களை எடுக்கிறார்கள். தம்பதியினர் சிலரும் தங்களின் அந்தரங்கங்களை செல்போனில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்.

இதுதான் பேராபத்தை விளைவித்துவிடுகிறது. அதாவது செல்போனில் உள்ள புகைப்படங்கள், வீடியோக்கள், தகவல்கள் என எதையும் வெளியில் இருந்து ஒரு-வரால் பார்க்க முடியும். இதற்கு எமன் வடிவில் வந்திறங்கும் 'டிராக்கிங்' செயலிகள் துணை நிற்கின்றன.



ஒருவருக்கு தெரியாமல் அவருடைய ஸ்மார்ட்போனில் இந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து செயல்பாட்டுக்கு கொண்டுவந்துவிட்டால் போதுமானது. எங்கிருந்து வேண்டுமானாலும் அந்த செல்போனின் செயல்பாடுகளை உளவு பார்க்க முடியும். இது பெண்களுக்கு பேராபத்தை தேடித்தந்துவிடும்.

அதாவது, செல்போன் உரையாடல்களை ஒட்டுக்கேட்க முடியும். வாட்ஸ்-அப் உரையாடல்களை பார்க்கலாம். புகைப்படங்கள், வீடியோக்களை பார்க்க முடியும். பெண்ணுக்கு தெரியாமல் அவரின் செல்போன் கேமராவை இயக்கி அவரை ரகசியமாக படம் பிடிக்க முடியும். படுக்கை அறை காட்சிகளை, உடை மாற்றும் காட்சிகளை கயவர்களால் எங்கிருந்தோ பதிவு செய்ய முடியும்.

கொடுமை என்னவென்றால், ஒரு செல்போனில் இந்த செயலியை பொருத்தி இருந்தால், அதை கண்டுபிடிப்பதும் கடினம். அது வேறு தோற்றத்தில் செல்போனில் நிறுவப்படும். இந்த உளவு செய-லி கிட்டத்தட்ட நம் செல்போனில் இருக்கும் 'கால்குலேட்டர்' மாதிரிதான் இருக்கும். இதனால் யாரும் எளிதில் சந்தேகம் அடையமுடியாது.

இன்னொருவரின் செல்போனில் இந்த

செயலியை 'இன்ஸ்டால்' செய்யும் கயவர் கூட்டம், அதற்காக பயன்படுத்திய ஒரு ரகசிய குறியீட்டு எண்ணை கொண்டு மாஸ்டர் உளவு செயலிய-ில் இருந்து சம்பந்தப்பட்ட செல்போனை தங்களின் முழு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடியும். சமீபத்தில் கூட 'டிராக் வியூ' என்னும் செயலியை ஒருவன் 100-க்கும் மேற்பட்ட பெண்களின் ஸ்மார்ட்போன்களில் ரகசியமாக இன்ஸ்டால் செய்து அப்பெண்களின் குளியல் காட்சிகள், படுக்கையறை காட்சிகள் மற்றும் உடை மாற்றும் காட்சிகளை ரகசியமாக படம் பிடித்த அதிர்ச்சி தகவல்களை செய்திகளில் படித்து இருப்போம்.

அந்த ஆபாச படங்கள் மூலம் பல பெண்களை மிரட்டி, தனது இச்சைக்கு இணங்க வற்புறுத்தியதும், பயந்துபோய் பலர் அவன் விரித்த வலையில் வேறு வழியின்றி வீழ்ந்ததையும் மறந்திருக்க முடியாது. இதில் கொடுமை என்னவென்றால், அவன் தனது அக்கா உறவுமுறை கொண்ட பெண்ணின் அந்தரங்கத்தையும் படம்பிடித்து இருக்கிறான். காமம் அவன் கண்ணை மறைத்துவிட்டது.

இந்த நிகழ்வு ஸ்மார்ட்போன் யுகத்தில் பெண்களுக்கு அடிக்கப்பட்டு இருக்கும் எச்சரிக்கை மணி. இதுபோன்ற காம கயவர்கள் உறவினர், பக்கத்து வீட்டுக்காரர், நண்பர்கள் என எந்த முகமூடிக்குள்ளும் பதுங்கி இருக்கலாம். எனவே, ஸ்மார்ட்போன் பயன்படுத்தும் பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு பே-ாதிய அறிவுரைகளை பெற்றோர் வழங்க வேண்டும்.

ஆபாச இணையதளங்களில் அந்தரங்க படங்களுக்கு அதிக மவுசு இருப்பதால், பெண்கள் விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம். சமூகவலைத்தளங்களில் தங்களின் புகைப்படங்களை முகப்பு படமாக வைப்பதையும், தங்கள் படங்களை பதிவு செய்வதையும் தவிர்ப்பது நல்லது. இல்லையென்றால், அந்த படங்களை பதிவிறக்கி மார்பிங் செய்து ஆபாச இணையதளங்களுக்கு விற்றுவிடும் ஆபத்தும் உள்ளது.

இதுபோன்ற ஆபத்துகளில் இருந்து பெண்கள் தப்பிக்க வேண்டுமானால், முதலில் தங்களின் செல்போன்களை வேறு எந்த நபரையும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. தங்களின் இ-மெயில் முகவரி மற்றும் பாஸ்வேர்டை யாரிடமும் கண்டிப்பாக தெரிவிக்கக்கூடாது. தெரிவித்தால், அதை தெரிந்த நபர்கள் இணையதளத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்? என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள் என்பதை பார்க்க முடியும்.

மேலும், தங்களை ஆபாசமாக புகைப்படம், வீடியோ எடுக்கவோ, அவற்றை யாருக்கும் பகிரவோ கூடாது.

உங்கள் செல்போன் வழியாக யாரோ உங்களை கண்காணிப்பதாக சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது பழுது ஏற்படும்போது செல்போன் கடையில் கொடுத்து பழுது சரி செய்து வாங்கிய பின்னர் செல்போனில் ஏ-தனும் ரகசியமாக இணைக்கப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டாலோ, ஒருமுறை 'பேக்டரி ரீசெட்' செய்வது நல்லது. அப்போதுதான் தேவையில்லாத ஆபத்துகளில் இருந்து பெண்கள் தப்பிக்க முடியும்.

அதே போல, பெண்கள் ஸ்மார்ட்போனில் உள்ள பாதுகாப்பு அம்சங்களை எவ்வாறு கை-யாளுவது என்பது தொடர்பான விளக்கங்களை அறிந்து கொண்டு செல்போனை பயன்படுத்தினால் பெரும்பாலான பிரச்சினைகளில்இருந்து விடுபடலாம்.

தகவல்: - க.தர்மராஜ்,

தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டாளர்.



## சைவம் மட்டுமே சாப்பிடும் கிராமம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே ஊர் மக்கள் அனைவருமே சைவமாக உள்ள ஒரு அதிசய கிராமம் இருக்கிறது. கடந்த 50 வருடங்களுக்கு மேலாக, இந்த கிராமத்தில் உள்ளவர்கள் சைவ உண-வுகளையே உட்கொண்டு வருகின்றனர். புதுக்கோட்டை அருகே ஆலங்குடி, வாடிமனைப்பட்டி எனும் கிராமத்தில் 50 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் வசித்து வரும் பொதுமக்கள் கடந்த 1963-ம் ஆண்டிற்கு முன்னர் சைவம், அசைவம் என அனைத்து உணவுகளையும் சாப்பிட்டு வந்துள்ளனர்.

1963-ம் ஆண்டு கிராமத்திற்கு வள்ளலார் சுத்த சன்மார்க்க சங்கத்திலிருந்து வந்த முத்தையா என்ற சாமியார், மாமிசம் உண்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கி கூறியுள்ளார். அதிலிருந்து அந்த கிராம மக்கள் சைவத்திற்கு மாறியுள்ளனர். கிராமத்தில் கோழி, ஆடு, வளர்த்தால்தானே அசைவ ஆசை வரும் என்பதால் ஆடு,கோழி வளர்ப்பதையும் விட்டுவிட்டனர்.பசுமாடு-களை மட்டும் வளர்த்து வருகின்றனர். கண்மாயில் மீன் வளர்த்தாலும் அவற்றை அவர்கள் பிடிப்பது இல்லை. அசைவம் சாப்பிடாத இந்த கிராமத்தினர் டாஸ்மாக் பக்கமும் செல்வதில்லை. இங்குள்ள பெரியவர்கள் முதல் இளைஞர்கள் வரை யாருக்கும் மது வாடையே இல்லை என்று பெருமை பொங்கக் கூறுகின்றனர். ஆண்களை திருமணம் செய்து கொண்டு வரும் பெண்களும் அசைவமாக இருந்தால், சைவத்திற்கு மாறி விடுகின்றனர். இவர்களின் திருமண-மும் வேத மந்திரங்கள் எதுவுமின்றி மிக எளிமையான முறையில்தான் நடைபெறுகிறது. திருமணத்திற்கு வரதட்சணை வாங்குவதில்லை.இந்த கிராமத்தில் அடி, தடி, சண்டை என போலீஸ் ஸ்டேசன் பக்கம் யாரும் சென்றதில்லை என்கிறார்கள். இவர்களில் பலர் 80 வயது முதல் 105 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்து வருவதாகவும் கூறுகின்றனர்.

-பாப்பனப்பட்டு வ.முருகன்

## வங்கிகள் கடன் தர மறுத்தால் புகார் அனுப்பலாம்: நிர்மலா

புதுடில்லி: “வங்கிகள், தகுதியான நிறுவனங்களுக்கு கடன் வழங்க மறுத்தால், அது குறித்த புகாரை எனக்கு அனுப்பலாம்; நான் நடவடிக்கை எடுப்பேன்“, என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நிர்மலா சீதாராமன், இந்திய வர்த்தகம் மற்றும் தொழ-ில் கூட்டமைப்பின் தேசிய செயற்குழு கூட்டத்தில் பேசியதாவது: ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள, விருந்தோம்பல் துறையினர், கடன் தவணை செலுத்துவதை மேலும் தள்ளி வைக்க வேண்டும் அல்லது கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர். இது, குறித்து, ரிசர்வ் வங்கியுடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு, “ஆத்மாநிர்பார் பாரத்“ திட்டத்தில், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு, அவசர கடன் உறுதி திட்டம் மூலம், மூன்று லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்க, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், சில வங்கிகள், உத்தரவாதமில்லாமல் வழங்கப்படும் அக்கடன்களை தர மறுப்பதாக, குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

வங்கிகள், தகுதியான நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதை மறுக்கக் கூடாது. அவ்வாறு மறுத்தால், அது குறித்த புகாரை எனக்கு அனுப்பலாம். நான் நடவடிக்கை எடுப்பேன். தொழில் துறையின் அவசர கடனுக்கு, மேம்பாட்டு நிதி மையம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு. அவர் கூறினார்.

# கவிதைக் கூடல்

மனதைக் கொன்று விட நினைக்கிறேன்

மனதைக் கொன்று விட
நினைக்கையியெல்லாம்
மாய கவிதைகள் முந்திக்
கொள்கின்றன
இது எத்தனையாவது முறை
எனத் தெரியவில்லை
இன்னும் பலமுறை மரணிக்க
வேண்டுதல் இருக்கிறது
மாய கவிதைகளோடு
போர்க்களத்தில் நிற்பது
நிகழ்வற்ற மரணங்களின் குறியீடு
அதன் நுட்பம் நெளியும் குறியீட்டில்
குளிரூட்டும் பிணவறை பூக்கள்
பதமாய் சாவு கோர்க்கிறது
அன்பின் பெருவெளியில்
நின்று தான் வம்பிழுக்கிறேன்
பேரச்சம் காதலோடு வாள் சுழற்ற
பெயரச்சம் கூட பிணம் மொய்க்கும்
முதுகில் குத்தி விட்டு வேடிக்கை
பார்க்கும் கவிதை ஒன்றில்
கண் சிமிட்டி நானே சிரிப்பதெல்லாம்
அல்லோலங்கிளி விடம்
உள்ளும் புறமும் அற்ற
தாழ்வாரங்களோடு கவிதை எழுதா
நான் அத்தனை அழகு
அதற்காக சாவதெல்லாம்
கணக்கிலில்லை...!

கவிஜி

## தலைப்பு: மறு ஜென்மம்

இருக்கும் வரைக்கும் சுவாசம் கொடுக்கும்
மரங்கள்
இறந்த பின்னே மீண்டும் பிறந்து
மறு ஜென்மம் எடுக்குமென்றால்
நம் மனித ஜென்மத்தின் வாழ்வு
விடியும்..
இல்லையேல் எப்போது வேண்டுமானாலும்
முடியும்..
வாழும் காலத்தில் வரமாய் மரங்கள்
மனிதனுக்கு உதவுவதில் தரமாய்
மரங்கள்
வயது முதிந்தோருக்கு காலாய் இருக்கும்
ஆலாய் வாழ்ந்து நாளும் வாழ்த்தும்
ஒரு மரம் வெட்டும் போது
ஆயிரம் மரங்கள் தானாகவே
விதைக்கப்படுவதாய்
படைத்திருக்கக் கூடாதா ஆண்டவன்?
எங்கும் பசுமையாய், எல்லோரும்
மகிழ்ச்சியாய்
மழை மிகக்கொண்டு, பட்டினி
துளியுமின்றி
இருந்திருக்குமே உலகம்...
ஒரு ஜென்ம வாழ்க்கையையே
ஒழுங்காய் வாழத்தெரியாமல்
மனிதன்?
இவனுக்கு எதற்கு மறுஜென்மம்..
ஆனால் இந்த ஒரு ஜென்மத்திலும்
அர்ப்பணிப்பு உணர்வோடு
தகாத செயல், சிந்தனையின்றி
நன்மை மட்டுமே செய்து
வாழ்ந்தோரின்
பல ஜென்மங்கள் வந்தால் தான்
புண்ணியம் இவ்வுலகிற்கு...
அப்படி யாராவது பிறந்து கொண்டே
இருப்பதால் தானோ என்னவோ
இன்னமும் மூச்சு விட்டுக்
கொண்டுள்ளது பூமி....

அ.வேளாங்கண்ணி

Owned Published and Printed By M.C.SEKAR Published From SF1,2nd Floor, 5/10,Anna Colony,Virugambakkam,Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah,Chennai - 600 014. Editor : M.C.SEKAR






விரைவில்
APPA AMMA
கள்ளச்சிரிப்பழகி
Theyaneshwaran
Eswar / M.C.Sekar / k-7 /thendral senthil / sarojee
rajkumar / nandhakumar / john / executive: mcs